திருக்கீழ்வேளூர்

உலா

TNSDA
08350

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

திருக்கீழ்வேளூர் உலா

உ. வே. சாமிநாதையர்
நூலகச் சுவடி

பதிப்பாசிரியர்
அ. இராசேந்திரன் எம்.ஏ
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981

First Edition : 1981
T.N.D.A. Pub. No. 82

894.8111
8350

© State Department of Archaeology

Thirukkilvelur Ula

Editor
A. Rajendran M.A.

General Editor
Dr. R. Nagaswamy

Price Rs. 4-50

Printed at the Departmental Press and Published
by the State Department of Archaeology
on behalf of the Government Oriental Manuscipt Library

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங் களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

செ. அரங்கநாயகம்
27-12-1980

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

உள்ளடக்கம்

1.	ஆங்கில முன்னுரை	
2.	முன்னுரை	1
3.	நூலாசிரியர்	6
4.	நூல்	8
5.	குறிப்புரையில் எடுத்தாண்டுள்ள நூல்கள்	60
6.	அரும்பத முதலியவற்றின் அகராதி	62

முன்னுரை

"மின்னுலாவிய சடையினர் விடையினர்
மிளிர்தரு மரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர்
கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையந் தாரினர்
புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னுலாவிய சிந்தையர் மேல்வினை
யோடிட வீடாமே."

காவிரித் தென்கரைத் தலங்களுள் 84-ஆவதாக வைத்தெண்ணப் படுவது **திருக்கீழ்வேளூர்.** இவ்வூர் நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் திருவாரூருக்குக் கிழக்கே 7-கல் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் எழுந்தருளியுள்ள கேடிலியப்பர் என்னும் திருநாமமுடைய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டதே இவ்வுலாப் பிரபந்தம்.

இதன் ஆசிரியர் பூதூர் **அந்தகக்கவி வீரராகவ முதலியார்** ஆவார்.

இத்தலத்தை மூவர் பாடல் பெற்றதலம் என்று குறிப்பிட்டபோதிலும், திருஞானசம்பந்தர், அப்பர், பாடிய திருப்பதிகங்கள் மட்டுமே கிடைக்கின்றன. மேலும் கீழ்வேளூர்த் தலப்பெருமையை விளக்கும் இலக்கியங்களும், நூல்களும் பல உள்ளன. வேத வியாசரின், கீழ்வேளூர்மகாத்மியமும், பிர்மாண்ட புராணம் - கீழ்வேளூர்த் தல மகிமையும், இவ்விறைவனைப் புகழ்ந்துரைக்கின்றன. சிவஞான யோகிகளின் மாணவர், காஞ்சீபுரம் ஸ்ரீ சிதம்பரமுனிவர் இயற்றிய சேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழும், அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழும் இங்கே எழுந்தருளியிருக்கும் முருகனின் பெருமைகளைப் புகழ்ந்து கூறுபவை.

மேலும், சேனை முதலியார் இயற்றிய, "கீழ்வேளூர் தாய் மகள் ஏசல்", தேவி பட்டணம் முத்துசாமி இயற்றிய தனிப் பாடல்கள், நாகை கிருஷ்ண உபாத்தியாயர் இயற்றிய தனிப்பாடல்கள், முத்துசாமி தீட்சிதர் இயற்றிய கீர்த்தனை முதலியனவும் இத்தலத்து இறைவனைப் புகழ்ந்துரைக்கின்றன.

கோயிலமைப்பு : இயற்கை எழில் நிறைந்த இத்திருக் கோயிலைக் கோச்செங்கணான் எடுப்பித்த பெருந்திருக் கோயில் என உரைப்பர். கோயில் கிழக்குநோக்கி அமைந் திருக்கிறது. இரண்டு பிரகாரங்களைக் கொண்டது.

அட்சயலிங்கேஸ்வரர், கேடிலியப்பர், பெருந்திருக்கோயிற் பெருமான், பூசரண்யபுரீஸ்வரர் எனப் புகழப்படும் இறைவன் எழுந்தருளியுள்ள இக்கோயிலில் மூன்றாம் இராசராசனின், 10, 18-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. எனவே இக்கோயில் கி.பி. 1225-க்கு முற்பட்ட தென்பது ஒருதலை.

கட்டுமலைமீது அமைந்துள்ள இக்கோயிலில் இறைவன் தான்தோன்றீஸ்வரராக வீற்றிருக்கிறார். இறைவியின் திருப் பெயர் 'வனமுலை நாயகி'. இதை வடமொழியாளர் 'சுந்தர குசாம்பிகை' என்று கூறுவர். கட்டுமலையின் முகப்பு வாசலின் தென்பால் அமைந்திருப்பது முருகன் திருக்கோயிலாகும். அஞ்சுவட்டத்தம்மை கோயில், முதல் பிரகாரத்தின் வடபாகத் தில் இருக்கிறது.

கோயிலின் மேற்குப் புறத்தில், விநாயகர், அகத்தியர், மகாலட்சுமி, சுந்தரபுஜாம்பாள் முதலியோருக்கு தனிக் கோயில்கள் உள்ளன. வடபால், குபேரனுக்கு தனியாகக் கோயில் உள்ளது. கோயிலைச் சுற்றிலும், சரவணன், இந்திரன், அக்கினி, பிரமன், சூரியன், சந்திரன் முதலியோ ருக்குத் திருக்குளங்கள் உள்ளன.

உலா இலக்கணம்: உலாவைப் பற்றிய குறிப்பு தொல் காப்பியத்தில் உண்டு. சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்ப ராமாயணம் முதலிய இலக்கியங்கள் தலைவன் உலாவந்ததைச் சுட்டுகின்றன. இதுவே பிற்காலத்தில் 'உலா' என்னும் தனிச் சிற்றிலக்கியமாக மாறியது. உலா என்பது, "இறைவனோ,

மன்னனோ, முடிபுனைந்தோ, மணம் புரிந்தோ, வெற்றி பெற்றோ, கரி, தேர், பரி ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு ஊர்தியில் ஏறிவருவதாகும். இவ்வுலா ஒரு நாள் முதல் ஏழு நாட்கள் வரை நிகழும். இவ்வுலாக் காட்சியைக் காணவரும் எழுபருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு மயங்கி வாடுவர். இதைப் புலவர் பெருமக்கள் கற்பனை நயம் தோன்ற கலிவெண்பாவில் (பன்: 132; வெண்; 27), முதல் நிலை, பின்னெழு நிலை என இரண்டாகப்பகுத்துப் பாடுவர். பன்னிரு பாட்டியல் (235, 336), அரசன், கடவுள், அறிவுடையோர் என மூவரையும் உலாவுக்குரிய தலைவர்களாகக் குறிக்கிறது. பொதுவாக இவ்விலக்கியங்களில், மகளிரின் இயற்பெயர் அமையாது, அவர்தம் காமமே மிகைபடக் கூறப்படுதலான் 'பெண்பாற் கைக்கிளை' என்றும் இதனைக் கூறுவர்.

இதுவரை, நூல் வடிவிலும் பெயரளவிலும் அறியப்படும் உலா இலக்கியங்கள் 72. காலவாரியாக அவற்றின் எண்ணிக்கையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

8 - ஆம்	நூற்றாண்டு	—	1
9 - ஆம்	,,	—	1
12 - ஆம்	,,	—	3
13 - ஆம்	,,	—	1
15 - ஆம்	,,	—	4
16 - ஆம்	,,	—	5
17 - ஆம்	,,	—	10
18 - ஆம்	,,	—	5
19 - ஆம்	,,	—	11
20 - ஆம்	,,	—	6
காலம் தெரியாதன		—	25
	ஆக மொத்தம்	—	72

திருக்கீழ்வேளூருலா: இவ்வுலா இலக்கியம் உ. வே. சா. நூலகத்தில் இருந்து பிரதி செய்யப்பட்டது. 408 கண்ணிகள் மட்டுமே உள்ளன. தெரிவை, பேரிளம் பெண் பகுதிகளுக்குரிய

கண்ணிகள் கிடைக்கவில்லை; கிடைத்தவற்றிற்கு மட்டுமே குறிப்புரை எழுதியுள்ளேன்.

இவ்வுலாவில் வந்துள்ள சிறப்புச்செய்திகள்

1. இறைவன் திருப்பெயர்கள்

கேடிலியப்பர், சித்ரகூடேசன், அரணமளித்தோன், ஞான தரிசனன், பொற்கோயிற்பிரான், நடராசன், இலந்தைவனத் தீசன், கேடிலாநாதன்.

2. இறைவியின் திருப்பெயர்கள்

கவுரி, உமையம்மை, வனமுலைநாயகி, வனமுலையாள்,

3. இசைக்கருவிகள்

யாழ், துந்துபி, பேரி, வேய், சங்கு, வங்கியம், வாரி, முரசு, வயிரியம், தாரை, பதலை, முழா, துடி, பம்பை, படகம், முதலை, முதி, எக்காளம், பேரிகை, கஞ்சுகம், பஞ்சவாத்தியம்.

4. அணிகலன்கள்

நித்திலப்பூண், வடம், பாடகம், பாதச்சிலம்பு, திரு நாண்காப்பு, சூடகம், மௌலி, குண்டலம், கட்டுவடம், கேயூரம், முத்துமாலை, உதரபந்தம், தாழ்வடம், தரளவடம்.

5. பவனியில் உடன்வந்தோர்

நந்திதேவர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனார், மனுநீதிசோழன், வரகுணபாண்டியன், விருஷபதேவர், முருகன், விநாயகன், திருமால், பிரமன், உருத்திரர், சூரியர், மருத்துவர், வசுக்கள், சாத்தன், மன்மதன், யமன், குபேரன் மற்றும் தேவகணங்கள், திக்காளர், ஓதுவார், ஏவலர்கள்.

6. சிவனடியார்கள்

சுந்தரர், அப்பர், சம்பந்தர், காரைக்காலம்மையார், மாணிக்கவாசகர், மனுநீதிசோழன், வரகுணபாண்டியன், திருமூர்த்தி நாயனார், சேரமான்பெருமாள் நாயனார், முதலியோர்.

7. பிற சிவத்தலங்கள்

திருக்காளத்தி, திருவாவடுதுறை, திருப்பழனம், திருமருகல், திருவிடைமருதூர், திருமழபாடி, திருவீழிமிழலை, திருமறைக் காடு, திருப்பறியல் வீரட்டம், திருவருணை, திருக்குற்றாலம், திருவானைக்கா, திருப்பனந்தாள், திலதை, திருவாரூர், திருக் கயிலை, தருமபுரம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, திருக்கழுக்குன்றம் முதலியன.

8. அம்பிகையுடன் வந்தோர்

கங்கை, பூமகள், ஏழுகலை பார்மகளிர், ஏழு நதிமாதர், காளி, இந்திராணி, சப்தகன்னியர் முதலியோர்.

9. வழிபட்டோர்

முருகன், அக்கினி, இந்திரன், முரகரி, ஆதிசேடன், தருமபுரவணிகன், சிங்கத்துவசன், விதுர்மன், காட்டரசன், மாவீர்யன் முதலியோர்.

10. தசாங்கம்

மலை-சித்ரகூடமலை; நாடு-சோழநாடு; நகர்-நாகை; ஆறு-கம்பாநதி; யானை-ஐராவதம்; படை-தேர்; கொடி-இடபக் கொடி; முரசு-பேரிகை; மாலை-கொன்றை; ஆணை-இறையாணை.

சென்னை-28,

அ. இராசேந்திரன்,
பதிப்பாசிரியர்.

நூலாசிரியர் வரலாறு

'**திருக்கீழ்வேளூருலா**'வின் ஆசிரியர் அந்தகக் கவி வீரராகவ முதலியார். இதை இச்சுவடியின் முதற்குறிப்பில் இருந்து அறிய முடிகிறது. இவர் கி.பி. 1654-இல் வாழ்ந்தவர். காஞ்சீபுரத்திற்கு அணித்தே உள்ள பூதூரில் பிறந்தவர். இவருடைய தந்தையின் பெயர் வடுகநாத முதலியார். இவருடைய ஆசிரியராக கச்சியப்ப சிவாச்சாரியாரைக் கூறுவர். இவர் கோவை, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், புராணம் போன்ற பலவகை இலக்கியங்களைப் படைப்பதில் வல்லவராக விளங்கினார்.

இவர் கயத்தாற்று அரசன்பால் பேரன்பு கொண்டிருந்தார். அம்மன்னர் மீது 'கயத்தாற்றரசன் உலா' என்ற இலக்கியத்தைப் பாடியுள்ளார்.

சேலத்தின் தாகம் தீர்த்த சேடன் என புகழப்படும் செழியத் தரையன் என்ற வணிகரைப் புகழ்ந்துப் பாடி பல பரிசில்கள் பெற்றதாகத் தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது.

திம்மையவப்பையன் என்ற வணிகரின் வேண்டுகோளுக்கு இணங்க, கயிலைப் புராணத்தைப் பாடினார் என்பதை, "வேத கயில புராணத்தை யித்தனைநா ளிருந்தோதி னோமரங் கேற்று வது தான்வந் தலாமலில்லை," என்னும் கவிராயரின் கூற்றால் அறியலாம்.[1]

அரியலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஒப்பில்லாத மழவராயர் என்ற மன்னன், இவரை ஆதரித்து பல பரிசுகளை வழங்கி இருக்கிறான். (நா. சரி: 247)

பரராச சிங்கன், பரராச சேகரன், பரராச சிங்கை யாரியன் என புகழப்படும் இலங்கை அரசனுக்குத் திருவாரூர் உலா,

1. பெருந் தொகை : 1251,

இராமாயணம் போன்ற இலக்கியங்களைச் சொல்லிக் கொடுத்துப் பல பரிசில்கள் பெற்று வந்தார். இவர் வாயால் திருவாரூர் உலா கேட்ட பரராச சேகரன், "கவி வீரராகவன் பாடிய நற் கவியே கவி அவனல்லாத பேர் கற்கவியே," என்று புகழ்ந்திருக்கிறார்.

அந்தகக் கவி வீரராக முதலியார் இயற்றிய நூல்கள் :

1) கழுக்குன்றப் புராணம்
2) கழுக்குன்ற மாலை
3) கயிலை புராணம்
4) கயத்தாற்றரசன் உலா
5) சந்திரவாணன் கோவை
6) சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்
7) சேயூர் கலம்பகம்
8) திருவாரூருலா
9) திருக்கீழ்வேளூர் உலா
10) திருக்கீழ்வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ்.

அழகர் கிள்ளைவிடு தூது ஆசிரியர் சொக்கநாதப் புலவர், இவரின் நெருங்கிய நண்பர் எனக் கூறுவர்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இயற்றிய

திருக்கீழ்வேளூருலா

காப்பு

நேரிசை வெண்பா

ஏருலா முக்க ணிலந்தைவன நாதருக்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே— நேரலரை
எய்விலா ழிக்கன்றே யேந்தினோன் மால்மருகன்
கைவிலா ழிக்கன்றே காப்பு.

அவையடக்கம்

கேடிலார் கீழ்வேளூர்க் கீர்த்தியள விட்டெளியேன்
நீடுலாப் பாட நினைக்கின்றேன்— கோடிவடத்
தீயருந்தி னாலுஞ் சிறுகாத தெண்கடலோ
ரீயருந்தி னாலா மென.

காப்பு : ஏருலா - அழகு உலாவுகின்ற. முக்க ணிலந்தைவன நாதர் - கீழ்வேளூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். சீருலா - சிறப்புமிக்க உலாப் பிரபந்தம். நேரலர் - பகைவர். எய்விலாழிக்கன்றே யேந்தினோன் - எய்கின்ற வில்லைச் சக்கரத்திற்கு மாறாக ஏந்தியவன் (திருமால்). விலாழி - யானைத் துதிக் கையுமிழ்நீர். விநாயக பெருமான் இவ்வுலா தடையின்றி இனிது முடித்தற்குக் காவலாக நின்று அருள்புரிவார் என்பதாம்.

அவையடக்கம் : கேடிலார் - கேடு+இல்+ஆர் >கேடிலியப்பர்; கீழ் வேளூரில் எழுந்தருளியுள்ள பெருமானின் திருநாமம். "கேடிலியை நாடுபவர் கேடிலாரே." (அப்: 6:1). கோடி வடத்தீ - கற்பாந்த காலத்தில் உலகை அழிக்கும் தீ.

நூல்

கலிவெண்பா

அகத்தியரை தென்பால் அனுப்பியது

பருதி மதியுமிரு பாணியணிந் தோனுஞ்
சுருதி மலர்க்கமலத் தோனுங் - கருதும் 1

எமையா ளுடையா னிமாசலத்துச் செய்யும்
உமையாள் மணத்திரளி னுள்ளார் - சுமையால் 2

அருத்தி வடபா லழுந்தாது தென்பால்
இருத்துமெனக் கும்பனை யேவக் - கிரித்தனுவாய் 3

எவ்வழி நின்மணத்தை யான்காண்ப தென்றிரங்கச்
செவ்வழியிற் சென்னித் திருநாட்டின்-மெய்வழியில் 4

போந்த கமலா புரிக்கரை யோசனையில்
சேர்ந்த ஞெகிழித் திசையின்கண்-பூந்தேன் 5

சுவடொன் றருவி சொரிசித்ர கூடக்
குவடொன் றதற்குக் குடபாற்-சுவையமுதத் 6

---

1. பருதி மதியும் - சூரிய சந்திரர்களை ஒத்த சக்கர, சங்குப் படையை. இருபாணி யணிந்தோன் - இருகைகளில் ஏந்திய திருமால். சுருதி - (வண்டுகள்) ஒலிக்கும். மலர் கமலத்தோன் - பிரமன். கருதும்-விரும்பும்.

2. இமாசலம் – இமயமலை. மணத்திரளினுள்ளார் - திருமணம் காணவந்த வானோர் குழாம்.

3. அருத்தி - அழுந்தி, ழ > ரகரமாற்றம். கும்பன் - குடத்தில் பிறந்த அகத்தியன். கும்பனை ஏவ - அகத்தியனைத் தென்பால் அனுப்ப; ''தென்பா லுயர்ந்து வடதிக் கெலாந் தாழ்ந்தது கண்டு; தன்பாற் குறுமுனியை யாங் கழைத்து . . . சீதத் தமிழாற் சிவமாகப் பூசைசெய்யப், போதத் தமிழ்முனி நீ போதுகென.'' (குற். உலா: 21-28), ''தென்புவி வடபுவியின் சமமாக்கிக், குடங்கையி னெடுங்கட லடங்கலும் வாங்கி, ஆசமித் துயர்பொதி நேசமுற் றிருந்த, மகத்துவமுடைய வகத்திய மாமுனி.'' (இலக். கொத்து. பாயிரம்). இருத்தல் - நிலைபெறச் செய்தல். கிரித்தனுவாய் - மேருவை வில்லாக வளைத்தவனே.

4. செவ்வழி - செம்மையான வழி. சென்னித் திருநாடு - பாண்டி நாடு.

5. யோசனை-நான்கு காததூரம். அஃது நாற்பது மைல் வழி தூரமாம். ஞெகிழித்திசை – அக்கினி திசை; வடமேற்குத் திசை. போந்த - பழகின.

6. அருவி - வடவருவி. சித்திர கூடக்குவடு – மூன்று குவடுகளாய் உள்ள குற்றாலமலை. ''திரிகூட மாமலை வாழ்தேவன்'' (குற். உலா, 9), குற்றாலத்து நடராச சபை (சித்திரசபை) பஞ்ச சபைகளில் ஒன்று.

தீர்த்தங் கடையத் தெறிதிவலை யொன்றிலொரு
மூர்த்த விலந்தை முளைத்துளது-நீர்த்தோய் 7

அருகு நிழலா மதனதுவித் தாலே
பெருகு வனமாய்ப் பிறங்கும்-திருமணமும் 8

காட்டுவோ மங்கெனலுங் கஞ்சமக னாகம்
பூட்டுகோ வைத்தொழுது போம்பொழுது-வேட்டவனுக் 9

கோது மலைத்தலையி லோரிலிங்க மாயிலங்க
மீது வதுவை விதந்திருத்தோன்-ஓதும் 10

அலையை யுகந்தோ னருந்திட்பக் கூத்தின்
நிலையை யிரட்டித்து நின்றோன்-தலைமை 11

இழைக்கின்ற சித்திரகூ டேசனெனத் தேச
மழைக்கின்ற பேராழி யானோன்-தழைக்கின்ற 12

வண்ணப் பதரி வனநாத ரென்றுலகம்
விண்ணப்பஞ் செய்ய வெளிப்பட்டோன்-உண்ணெகிழ்ந்து 13

7-8. தேவர்கள் திருப்பாற்கடலில் அமுதம் கடையும்போது எழுந்த அமுதத் துளியொன்று சிதறி இத்தலத்தில் வீழ்ந்தபோது இலந்தை மரமாகிப் பின் வன மாகியது. எனவே இத்தலத்தைப் பதரிகாரணியம் என்று புராணம் கூறும். இங்கு இலந்தை தலவிருட்சம். பிறங்கும் - விளங்கும்.

9. கஞ்ச மகநாகம் - விடத்தை உடைய அரவம், பூட்டுகோ - தலையில் அணிந்த இறைவன்.

10. வதுவை - திருமணம். மலைத்தலை - கட்டுமலை.

11. அலையை உகந்தோன் - கடல் நீரைப் பருகிய அகத்தியன். ''வாரி யுண்ட தாலத்தான்.'' (குற். உலா. 428). கூத்தின் நிலையை இரட்டித்து நிற்றல் - சிவனாரின் கால் மாறி ஆடிய ஆனந்த தாண்டவம்.

இறைவனின் திருமணக்கோலக் காட்சியைக் காண முடியாத அகத்தியர் இறைவனிடம் வேண்டத் தமது திருக்கல்யாணக் கோலத்தினை நல்கியருளினார். அப்போது அகத்தியர் வலது பாத தரிசனம் வேண்டத் தன் இடது காலை ஊன்றி வலது பாதத்தைத் தூக்கி ஆனந்த தாண்டவம் ஆடிக் காட்டினார் என்பது புராண வரலாறு.

12. சித்திர கூடேசன் - சித்திர கூடத்தில் எழுந்தருளியுள்ள நடராசர் பேராழி - கீர்த்திக் கடல்.

13. பதரிவனநாதர் - இலந்தை வனநாதர். கீழ்வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம்,

தலப் பெருமை

கந்த னொருவன் கடற்சூர னைத்தடிந்த
பந்த வினையனைத்தும் பாறுதற்கு-வந்து 14

பதரி வனமருங்கிற் பண்டகர மைந்து
மதுரியதன் னாமத்தால் வைத்துக்-சுதியாயும் 15

ஆளி புறம்தாங்கு மஞ்சுவட்டத் தம்மையெனும்
காளி புறங்காக்கக் கற்பித்து-மீளப் 16

பிரம சரியம் பிடித்தொருதன் வேலாற்
பரமனெதிர் புட்கரணி பண்ணி-அருமைத் 17

தவஞ்செய்து பாவந் தவிர்த்து வனம்போக்கி
நவஞ்செய் பதிவிதித்த நாளில் - உவந்தமரர் 18

விண்ணகத்தூர் மேல்வேளூர் வீரவே ளுக்கீந்த
மண்ணகத்தூர் கீழ்வேளூர் மற்றென்றும் - புண்ணியத்தின் 19

பொய்கை சரவணப்பூம் பொய்கையென்றும் பூமாரி
பெய்கை தரவிருந்த பெண்பாகன் - வையகத்தைக் 20

---

14. கடற்சூரனைக் கடிந்தவன்-முருகன் செய்த சூரசங்காரம். ''மாக்கடற் சூர் வென்றோன்'' - (பெரு. தொகை. பக்:23). ''முருகவேள் சூர்மா முதறடிந் தான்''-(தண்டி-38 உரை); பாறுதல்-வேரோடு நீக்குதல்.

15. பண்டகரமைந்து...வைத்து - பண்டு + அகரம் + ஐந்து > முன் ஐந்து பார்ப்பனக் குடியிருப்புகளைத் தன் பெயரால் அமைத்து.

16. ஆளி - சிங்கம். அஞ்சு வட்டத்தம்மை - ஐந்து இடங்களிலும் பரவி நிற்பவள்; காளியம்மன். புறங்காக்க - முருகன் தன் தவத்திற்குக் கேடு வரர்மல் அரணாக இருந்து காக்க,

17. புட்கரணி-புஷ்கரணி > தாமரைத்தடாகம்.

18. அருமைத்தவம் - சிறப்பு மிக்க தவம். அமரர் - வானோர்.

19. விண்ணகத்தூர் - வானோர் உலகம். வீரவேள்-முருகன். கீழ்வேளூர்-முருகன் இவ்வூருக்கு வந்து வழிபட்டதால், கீழ்வேளூராயிற்று. முருகன் சூரசங்காரத்தால் ஏற்பட்ட பாவம் போக, இவ்வூரை அடைந்து தன் வேலாயுதத்தால் சரவணப்பூந்தீர்த்தம் உண்டாக்கிக் கடுந்தவமியற்றினார்: அஞ்சுவட்டத்தம்மை, முருகனது அருகில் வீரஹத்திகளால் இடையூறு நேராவண்ணம் அரணாக இருந்து அருள்புரிந்தார் என்பது புராணச் செய்தி.

20. பெண்பாகன் - அர்த்தநாரீஸ்வரர். - ''மங்கையை இடப்பால் வைத்தார்'' (அப்பர்: 4 : 273). ''பாதியிலுமையாள் தன்னைப் பாகமாய் வைத்த பண்பன்'' (அப்பர் 4 : 311).

கொண்ட வெழுகடலுங் கொள்ளாப் பதியிதென
வண்டர் பிறரு மருந்தவரும் - கண்டு 21

சரண மெனப்பூ சரண புரியாய்
அரண மளித்தநக ராளன் - பிரளயத்தால் 22

எங்குங்கே டுண்டாயு மித்தலங்கே டின்மையால்
தங்குங்கே டில்லா தவனானோன் - அங்குரகன் 23

நீடா யிரம்படைத்தா னீண்ட வடமேருக்
கோடா யிரம்புதைப்பக் கோதைபோய்ச் - சாடாது 24

மாற்று மொருப்படநீ வாங்குவாங் கென்றுசிவன்
சாற்றுமிரு சொல்லரவுந் தாழ்ந்ததற்கு - வீற்றிருக்கும் 25

கோவிலின் மேல்பாற் குளங்கண் டதன்கரையில்
மேவிலிங்க மொன்று மிகவகுத்துப் - பூவிலந்தை 26

கானத் திறைஞ்சக் கடிய வினைகளைந்து
ஞாலத் தெரிசனமும் நல்கினோன் - ஈன 27

நரக னுயிர்செகுத்த நாள்வினைபோய் மாள
முரகரிபூ சித்த முதலோன் - சுரகுருவாம் 28

---

21. எழுகடல் - எழு வகைப்பட்ட கடல். அவை உப்பு, தேன், கருப்பஞ் சாறு, தயிர், நெய், பால், நீர் என ஏழு. "உப்புத்தேன் இக்கு வெண்டயிர் நெய் பால் அப்புக்கடல் ஏழ் ஆகும் (பிங்க. 585). "எழு கடல், எழுகிரி, எழு பொழில் என இடை (குலோ. பிள். தமிழ்:36). "காக்கும் கடலெழு ஆடும்" (குலோ. உலா:150) "கடலேழு மாடேன்" (குலோ, உலா 364). அண்டர்-தேவர். அருந்தவர் - அருந்தவத்தோர்.

22. அரணம் - காவல். பிரளயம்-உலக முடிவு கால வெள்ளம், "நீரெனும் பிரளயம் கொள்ள." (அப். 4:486).

23. உரகன் - ஆதிசேடன்.

24. கோதை - வாயுதேவன். கோடாயிரம் - ஆயிரம் சிகரங்கள்.

25. சொல்லரவு தாழ்தல் - ஆதிசேடன் தன் வலிமையை இழத்தல்.

26. குளம் - ஆதிசேட தீர்த்தம். இலிங்கமொன்று மிக வகுத்து-அனந்தேசுவரர் என்ற பெருமானை நிறுவி.

23-27. இங்கு ஆதிசேடன் ஆண்மை பெற்ற வரலாறு சுட்டப்படுகிறது. பண்டு வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் வலிமையுடையர் யார் எனக் கருதிப் போர் நடந்தது. நடந்த போரில் ஆதிசேடன் தோற்றுத் தன் வலிமையை இழந்தான். பிறகு இத்தலம் நாடிச் சிவலிங்கம் தாபித்து வழிபாடு செய்து, இழந்த வலிமையையும், ஆண்மையினையும் பெற்றான் என்பது வரலாறு.

28. நரகன் - நரகாசுரன். முரகரி - முரன் என்ற அசுரனைக் கொன்ற திருமால். திருமால் நரகனைக் கொன்ற பாவம் போக, இத்தலத்து இறைவனை வழிபட்டுத் தன் பாவத்தைப் போக்கிக்கொண்ட வரலாறு சுட்டப்படுகிறது.

பொன்னை யுகந்தபவம் போகைக்குப் போதுதொழு
தென்னை விடுத்தா ரெனவிந்தத் - தென்னாட்டு 29

இலந்தைவனம் போதுகென யாகமும் வேட்பான்
மலர்ந்த கனலியொடும் வந்து - பொலங்குலிசங் 30

கொண்டொரு கூபங் குழித்தவனும் பூசிப்ப
மண்டுதழ லோனும் மடுவெடுத்து - விண்டலத்துக் 31

கோன்புரியும் வேள்வி குறையறுத்து நாடோறுந்
தான்புரியு மாதவத்திற் சாருதலும் - வான்புரியார் 32

கோவுக் கருவினையுந் தீர்த்துக் குழையுமெழு
நாவுக்கு வேட்டனவும் நாட்டினோன் - மாவச்ர 33

பாணியின்மால் யானைப் பதாகைத் திருநாளும்
பேணியபொற் கோயிலுமுன் பெற்றபிரான் - யாணர் 34

வருந்திருச் செங்கண் வளவன் அளித்த
பெருந்திருக் கோயிற் பெருமான் - திருந்து 35

---

29. சுர குரு - தேவகுரு, இந்திரன். உகந்த - இன்பத்தில் திளைத்த. விரட்ட - சபிக்க. பொன் - பெண் (வட். வழக்கு).

30. கனலி - அக்கினி தேவன். பொலம் - பொன், குலிசம்-வச்சிராயுதம்.

31. கூபம்-கிணறு. குழித்தல்-தோன்டுதல் (வட். வழக்கு) மண்டுதழலோன்-அக்கினிதேவன். மடு - குளம், அக்கினிதேவன் குன்ம நோயால் வருந்தும் காலத்தே இந்திரனுடன் இத்தலம் சார்ந்து இறைவனை வழிபட்டுக் குன்மநோய் நீங்கப்பெற்றான் என்பது புராண வரலாறு.

32. விண்டலத்துக்கோன் – உம்பர்கோ; இந்திரன்.

33. வான் புரியார்கோ – இந்திரன். எழுநா - அக்கினி தேவன்.

28-33. இந்திரன் சாப விமோசனம் பெற்றது :- இந்திரன் ஊர்வசி போன்ற மகளிரொடு இன்பத்தில் திளைத்திருந்தபோது வசிட்டர் சபைக்கு வருகிறார். தன்னைக் கண்டு வரவேற்காத இந்திரனைச் சபித்தார். அவரது ஆணைப்படியே, அக்கினிதேவனோடு இத்தலம்சார்ந்து வழிபட்டுச் சாப விமோசனம் பெற்றான் என்பது வரலாறு.

34. யானைப் பதாகைத் திருநாள் - மார்கழி அமாவாசையில் எடுப்பிக்கும் திருநாள்.

35. செங்கண்வளவன் - கோச் செங்கட்சோழன்: இவன் எடுப்பித்த 108 மாடக் கோயில்களில் இத்திருக்கோயிலும் ஒன்றென்பர்; பெருந்திருக்கோயில் - மாடக்கோயில்; ''பெரிய பெருந்திருக்கோயின் மன்னு, முத்துலாவிய வித்தினை யேத்துமின்'' (சம்பந்தர்). ''கீழ்வேளூர்ப் பெண்ணிலாவிய பாகனைப் பெருந் திருக், கோயிலெம் பெருமானை'' (சம்பந்தர்).

தரும புரவணிகன் சந்திர குத்தன்
பொரும வருந்துயரம் பூண்டு - பெருமிடியால் 36

வாடித் திரியுங்கால் மாசித்ர கூடத்தில்
ஓடித் திருக்கோயி லுட்புகுந்து - நீடி 37

இளைத்துத் தடுமாற்றத் தீசனடி வீழ
வளைத்துப் பணிவாய் மகிழ்ந்து - களித்த 38

மனத்தை யவர்க்காக்கும் வண்ணமளகேசன்
தனத்தை யவர்க்காக்குந் தக்கோன் - நுனிந்தாங் 39

கிறுதிசெயத் தேடுமா டென்றறியா தன்று
வெறிதுகர நீட்டும் வினையான் - மறுபழிக்குத் 40

தோற்றி யொருமுனிவன் சொல்லமறு வாணிகம்போய்
ஆற்றி யொருவ னறமனைத்தும் - கூற்றுவிழி 41

வாளூர் கணிகை மனையிலொரு காமுகர்க்காய்
வேளூர் மறுகில் விலைப்பட்டு - நாள்கழிப்பான் 42

கைம்மே லருந்திக் கழுவிநீ ராங்கபடாய்
மெய்ம்மேல் விழப்பழநோய் மீண்டதற்பின் - அம்மாது 43

---

36. தருமபுரம் - மாயூரத்திற்கு அணித்தே உள்ள ஓரூர்; சந்திரகுத்தன் - சந்திரகுப்தன்; ப் > த் மாற்றம்.

37. சித்திரக்கூடம் - கீழ்வேளூரில் இறைவன் எழுந்தருளியுள்ள சபை.

36-40. சந்திர குப்தன் செல்வம் பெற்ற வரலாறு :-

இவன் தான் சேமித்து வைத்த பொருளையெல்லாம் மனம்போனபடி செலவு செய்து ஏழையானான்; வறுமையால் வாடினான்; பல ஊர்களுக்குச் சென்று பிச்சை எடுத்தான்; இறுதியில் இவ்வூர் சார்ந்து இறைவனின் திருவடியில் விழுந்து அழ, இறைவன் ஆட்கொண்டு குபேரன் மூலமாகப் பெரும் செல்வத்தை அளித் தருளினார் என்பது வரலாறு.

39. அளகேசன்-குபேரன். ''விஞ்சு புகழார் அளகேசர்'' (வீர. சோ. யாப்.4. மேற்).

39-40. நுனிந்தாங் கிறுதிசெய-நோய் வாய்ப்பட்டு வருந்த

41. மாடு-செல்வம்.

40-46. விதுர்மன் என்பான் தீய வழியில் தன் சொத்துக்களை இழந்து, சிவராத்திரியன்று சிவனை வழிபட்டுப் பழைய பிறவிகளில் ஈட்டிய பாவங்களை நீக்கிக் கொண்டான்.

42. கணிகை-விலைமாது; கூற்று விழி-கூற்றம் போன்ற கண்கள்.

43. கழுவுநீர்-மன வழுக்கைக் கழுவுநீர்; பழநோய்-பழைய பிறவிகளில் ஈட்டிய பாவங்கள்.

பார்த்துப் பணியப் பணிதவிர்த்தா லுய்யேனென்
றார்த்துத் தனதுமிட ருங்கறுப்பச் - சேர்த்திருகை 44

மாகையாற் பற்றி வலிதுதடுத் தாட்கொண்ட
தாகையா லாளுங்கோ வாயினோன் - தோகை 45

வயிற்றி லிரண்டு மதியிற் கருவைத்
தியற்றி மறையோ னிறப்பக் - கயிற்றணியும் 46

வாங்கிப் பிறந்தகம்போய் வைகி மகப்பயந்து
தாங்கித் தலைவி தலத்தெய்த - வாங்கவடன் 47

தாயத்தான் சோர தனையனிவ னென்னவித
னீயத்தா சான்றெனக்கு நில்லென்னத் - தாயத்தான் 48

பொய்ச்சூள் மொழிவான் புகழ்ப்பலிபீ டம்விலகக்
கைச்சூழ் மழுவெறிந்து கண்டித்தோன் - இச்சைதெரி 49

நாவார மூவர் நயந்து கனிந்தேத்தும்
தேவாரம் பெற்ற சிவாலயத்தான் - தாவாத 50

காயமே காயத்தான் கந்தரமே கந்தரத்தான்
மாயமே மாயத்தான் மாய்வித்தான் - தீயதொரு 51

---

44. மிடறு-தொண்டை.

45. தோகை – பெண்.

45-49. மழு வெறிந்து காத்த வரலாறு;- சிவனை வழிபட்டுப் பூசை செய்து வந்த ஆதிசைவன் ஒருவனது மனைவி கருவுற்றாள். கருவுற்ற இரண்டாம் மாதம் தன் கணவனை இழந்தாள். தன் தாயகம் சென்ற அம்மாது ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மகன் பெரியவனானதும், இவ் வூருக்கு வந்து தன் கணவனுக்குரிய வழிபாட்டு உரிமையைத் தன் மகனுக்கு வழங்க வேண்டும் எனத் தாயரிடம் முறையிட்டாள். அவர்களோ இப்பையன் ''நேர் முறையில் தந்தைக்குப் பிறந்தவனல்ல'' என்று வழிபாட்டு உரிமையை தர மறுத்தனர்; அம்மாது இறைவனிடம் முறையிடக் கேடிலியப்பர், மழு வெறிந்து தாயத்தாரை அழித்து, வழிபாட்டுரிமையை, அச்சிறுவனுக்கு அளித்தார். [இவ் வரலாறு திருவிளையாடற் புராணத்தில் உள்ள மாமனாக வந்து வழக்குரைத்த செய்தி போல் உள்ளது.]

46. இரண்டுமதி - இரு மாதங்கள்; கயிற்றணி - தாலி; மறையோன் - ஆதிசைவன்,

48. சோரத்தனையன் - சோரத்தால் பிறந்த மகன்.

50. தேவாரம் பெற்ற சிவாலயம் - இத்தலத்தின் மீது சம்பந்தரும், நாவுக் கரசரும் அருளிய பதிகங்கள் உண்டு.

51. காயமே காயத்தான்-ஆகாயத்தை ஆடையாக உடையவன்; கந்தரமே கந்தரத்தான்-கண்டத்தில் விடத்தை வைத்திருப்பவன்.

மாமன் மகன்மேல் மகன்விடுத்தான் வந்துதொடும்
காமன் கணைமேற் கணைவிடுத்தான் - நேமி 52

யரிபால னங்க மரிபாலன் தேவி
பரிபாலன் சைவ பரிபாலன் - தெரிசித்தார் 53

அடிமடக்கு

ஆர்க்கு மகத்திருவை யாற்றினான். நால்வேத
மார்க்கு மகத்திருவை யாற்றினான் - ஏற்குமிடப் 54

பாணித் தமரப் பழநத்தான் காணாத
பாணித் தமரப் பழனத்தான் - வேணிக்குப் 55

போத வரவம் புலியூரா நின்றசிவ
போத வரவம் புலியூரான் - கோதண்டர் 56

வன்னி நிழற்கா மருகலா மட்டவிழும்
வன்னி நிழற்கா மருகலான் - தன்னரையில் 57

---

52. மாமன் - மா+மன்>தாருகாசுரன். ''அண்டர்க ளச்சம்தீரத் தாருகா சுரனைக் கொன்று'' (திருவா. புரா. 366); மகன்-முருகன். கணை விடுத்தான் - கண்ணாகிய கணையை விடுத்தான்.

53. நேமி அரி பாலன்-திரிபுரசங்கார காலத்தில் பூமியை தேராகக் கொண்டவன்; ''ஓரடிக்குத் தாங்காத தேர் முழுதும்தாங்குமோ'' (குற்-உலா. 22); அங்க மரிபாலன்-தலையை அரிகின்ற பாலமென்னும் படையுடையவன்; சைவ பரிபாலன்-சைவத்தைக் காப்பவன்.

54-61. கண்ணிகள் அடிமடக்குச் சொல்லணியாக அமைந்துள்ளன.

54. அகத்திருவை-தேகத்தில் உள்ள மாறுபாடாகிய குற்றம்; நால்வேத... மகத்திரு-நான்கு வேதங்களும் ஒலிக்கும் யாகத்தை நடத்தியவன்.

55. பாணி...காணாத-தன் கையில் ஒலிக்கும் பழைய சங்கை உடையவன் (திருமால்) காண முடியா பாணி ..பழநத்தான்-தன் கையில் உடுக்கை ஏந்தியவன்; திருப்பழனத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்: ''பண் மிழற்றும் பழனத்தான்'' (அப். 4 ; 114) நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்; வேணி-சடை.

56. போதஅரவ...புலியூரான் - நச்சுப் பாம்பை சூடியவனும், தில்லையில் நடம்புரிபவனும் ஆகிய சிவன்; வியாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்ட தலமாதலின், சிதம்பரம்-புலியூராயிற்று. ''பெறுதலா லேரா ரெழிற் புலியூர், மன்றினுக்கு'' (சிதம். கல் (S.I.I. IV. P33). சிவபோத அரவம்-பதஞ்சலி என்னும் பாம்பு.

57. தேன் சிந்தும் வன்னி நிழற் காவில் எழுந்தருளியுள்ள இறைவனும்; திருமருகலில் உறையும் இறைவனும் ஆம்.

வாசமா தங்க வனத்தினான் போற்றிசெயும்
வாசமா தங்க வனத்தினான் - நாசமெனும் 58

காலம் பரவக் கடைமுடியான் செய்தோறும்
காலம் பரவக் கடைமுடியான் - மேலிரவி 59

மண்ணம் பகமா மயிலையான் கண்மணிபூம்
மண்ணம் பகமா மயிலையான் - கண்ணுருவாய் 60

வாவி முளரி வளைகுளத்தான் வெண்பணில
வாவி முளரி வளைகுளத்தான்-தாவின் 61

மருது திலதை மழவை மிழலை
பரிதி மறைசை பறிய-லருணை 62

சயிலம் விளமர் தருமை மதுரை
கயிலை புகலி கமலை-பயிலிம் 63

அபய னனக னசல னமலன்
உபய வுருவி லொருவ-னவையில் 64

பரத விருது பகவ னகவன்
வரத னொருதன் மருதன்-விரதன் 65

---

58. வாசமா...வனத்தினான்-தன்னரையில் மாதின் உடம்பை பெற்றவனும்; புகழப்படும் சுடுகாட்டை அரசாட்சி செய்பவனுமாம்.

60. பகமா...மயிலையான் - கொக்கு நிறமான சாம்பலை பூசியவனும் மயிலையில் எழுந்தருளியிருப்பவனுமாம்.

61. வாவி முளரி - குளத்தாமரை; வெண்பணிலம் - வெண்சங்கு

62. மருது - திருவிடை மருதூர்; திலதை - திலதைபதி; மழவை-திருமழபாடி; மிழலை - திருவீழிமிழலை; பரிதி-பரிதிநியமம்; மறைசை - திருமறைக்காடு; பறியல் - திருப்பறியல் வீரட்டம்; அருணை - திருவருணை.

63. சயிலம்-சிவசைவம்; விளமர்-விளநகர்; தருமை-தருமபுரம்; மதுரை-மதுரை; கயிலை-திருக்கயிலை; புகலி-சீர்காழி; கமலை-திருவாரூர்.

64. அசலன் - ஆசையில்லாதவன்; அபயன்-அச்சமில்லாதவன்; அமலன்-இயல்பாகவே பாசத்தினின்று நீங்கியவன்; ''குறையுமில மமலன் ஆலயத்துளே'' (திரு. புரா:105); ''அமலன் புற்றினிடத் திலங்கி'' (திரு. புரா:147); உபய உருவி லொருவன் - இரண்டுருவாய் நிற்பவன்; உமையொரு பாகன்.

65. மருதன்-திருவிடை மருதூரில் கோயில் கொண்டிருக்கும் இறைவன்; **அகவன் - கூத்தன்.**

அரக்கன் மிடுக்கி லடுக்க லெடுக்க
உரக்க நெரித்த வுரத்தன்-இரக்க 66

வெடுத்த சிரத்தி னிடக்கண் வலக்கண்
அடுத்த விருச்சி னனற்கண்-விடுத்தொழுகு 67

பச்சிரத்த பிச்சைபுக்க பத்மகைத்த லத்திலத்தன்
முச்சிரக்க ரக்கணிச்சி முக்கணக்கன் வச்செரித்த 68

வங்கம்பெண் டுங்கங்கொண் டங்கண்டும் பண்கண்டும்
தங்கன்பன் சம்பந்தன் தன்பந்தன்-பொங்கும் 69

ஓத முலாமின் னுலாவு சடேசுரன்
வேத முலாவு விசாலகன் - மாதவ 70

சாயக னாகம சாகர னான்முகன்
நாயகன் வானவ நாயகன் - ஓயா 71

தலங்கு பொலங்கொம்ப ரம்பரமுந் திக்கும்
இலங்கு மிலந்தைவனத் தீசன் - துலங்கு 72

---

66. அரக்கன்-இராவணன்; அடுக்கல்-கயிலைமலை; இராவணன் கயிலை மலையைத் தூக்க முற்பட்டபோது அவன் செருக்கு அடங்க அழுத்தி நெரித்தார். "நஞ்சு இறை படுத்தபுன் மிடற்றிறைவன், உலகு பொதி யுருவமொடு கோதைத் தலைநாள், வெண் கோட்டுக் குன்றமெடுத்த மீளி" (ஆசிரி. மாலை. புறத்); "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன், உமை அமர்ந்து உயர் மலை இருந்தன னாக, ஐயிரு தலையின் அரக்கர் கோமான், தொடிப் பொலி தடக்கையின் கீழ் புகுத்த அம்மலை, எடுக்கச் செல்லாது உழைப்பவன்" (குறிஞ். கலி:2).

67. இரக்கவெடுத்த-பிச்சை எடுக்க; சிரத்தன் - கபால ஓட்டை ஏந்தியவன்; விருச்சினனற்கன்-சூரியனை யொத்த நெற்றிக் கண்.

68. பச்சிரத்தம் - பிரமனின் குருதி; பத்மகைத்தலம்-தாமரை போன்ற கைகள்; முச்சிரகரக்கணிச்சி - மூன்று தலைகளையுடைய கணிச்சிப் படையை ஏந்தியவன்; கணிச்சி - மழுப்படை.

69. பூம்பாவையைச் சம்பந்தர் எழுப்பிய வரலாறு சுட்டப்படுசிறது; தங்கன்பன் - தங்கிய அன்பராகிய சம்பந்தர்.

70. ஓதம்..சடேசுவரன்-நீர் உலாவும் ஒளிர்சடை அந்தணன். விசாலகன்-சிவன். மாதவ சாயகன்-திருமாலுக்கு வான்போன்றவன்.

71. ஆகம சாகரன்-வேதக்கடல். நான்முக நாயகன்-பிரமனுக்கு இறைவன். வானவ நாயகன்-தேவர்களுக்கு அரசன்.

72. அம்பரம்- ஆகாயம். பொலங்கொம்பர்-பொன்னிறமான கொம்பையுடைய ஐராவதம் என்னும் யானையுடையவர். இலந்தைவனத்தீசர்-கீழ்வேளூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருநாமம். துலங்கு-பிரகாசிக்கின்ற.

படராசி நாகா பரணன் சரண
நடராசன் கேடிலா நாதன் - கடகளிற்று 73

விருதுக்கொடியேற்றுதல்

மேனித் துவச மிசையேற்றி வீதியுலா
வானித் திருநாளி லாங்கொருநாள் - ஞானத்தால் 74

தங்க ளிறைவர் தவமு மருச்சனையும்
பங்கமறச் செய்த பழம்பகுதியைச் - சங்கத் 75

தொருவாது போற்றுதலே யொப்பப் புலரி
இருவா ரணமு மியம்பப் - பெருவான் 76

மலருமொரு செவ்வந்தி வந்ததன்பின் பட்ட
அலரி முளைத்த வளவின் - மலைபயந்த 77

திருமுழுக்காடல்

காதளையும் கண்ணி கரைகடந்த வேட்கையெனு
மாதளையிற் பூத்த மனப்பாயன் - மீதின்பம் 78

தோய்ந்துதிருப் பள்ளி துறந்து - வயிரநிரை
வாய்ந்த மிசைவசந்த மண்டபத்திற் - போந்து 79

பயிலு மகன்பொய்கை மஞ்சனநீர் பைம்பொன்
குயிலு மணிக்குடத்தாற் கொண்டு-கயிலை 80

---

73. படராசி-பல படங்களையுடைய. நாகாபரணன்-உடம்பிலும், அரையிலும், கையிலும் பாம்பை அணியாக அணிந்த இறைவன். கேடிலாநாதன்-கேடிலீஸ்வரர். ''கீழ் வேளூர் ஆளும் கோவை கேடிலியை நாடுபவர் கேடிலாரே.'' (அப்பர்). கடகளிறு-மதயானை.

74. துவசம்-விருதுக்கொடி; விடைக்கொடி. ஆனித்திருநாள்-ஆனிமாதத்தில் நடக்கும் திருவிழா.

75. பழம்பதி-பழைய பதியாகிய கீழ்வேளூர்.

76. சங்கத்.........வாரணமுமியம்ப-தமிழ்ச் சங்கத்தில் புலவர்கள் வாது செய்வதால் ஏற்படும் ஓசையைப் போல இரு யானைகளும் முழங்க; தற்குறிப் பேற்ற அணி. பெருவான்-பரந்த வானம்.

77. செவ்வந்தி-மாலைநேரம். அலரி-சூரியம். மலை பயந்த-மலையீன்ற.

78. காதளையும் கண்ணி-காதை வருடும் கண்ணி.

நிறம்போய்ப் பசும்பொன் னெடியவட மேருப்
புறம்போர்வை செய்த பொலிவோ-பிறங்கும் 81

ஆடை அணிதல்

பவளக் குவடு பனிவெண் படலம்
திவளப் பொதுளுந் திறனோ-கவுரியெனும் 82

மங்கை யுமையால் வளையூ றொளித்தமையக்
கங்கைபரி சித்தறியுங் காட்சியோ-வெங்கட் 83

கருங்களிற்றுத் தோல்போய்க் கவளத் தவளப்
பெருங்களிற்றுத் தோல்போர்த்த பேறோ-விருங்க 84

ணெரியுருவச் சிம்பு ளெனச்சினந்த காலத்
தரியுருவை மொய்த்த வழகோ-தெரிவை 85

குழைத்தபிரா னுக்கிந்தக் கோலமென வெள்ளை
தழைத்ததிரு வொற்றாடை சாத்தி-யெழுத்தெழுதா 86

வோசை மறையோ ருறையுஞ் சிவாகமத்தின்
பூசை பெரிது புரிந்ததற்பின்-தூசுகரி 87

அணி பூணுதல்

வாமத் துறக்க வரையுமெழு தாலுமொரு
நாமத் திருக்காப்பு நாணணிந்து-பாமொழியின் 88

---

81. புறம் போர்வை செய்தது-திரிபுர சங்கார காலத்தில் மேருவை வில்லாக வளைத்தது, "முன்பு நாம் வாங்கா மலை சிலையாய் வாங்குநாள்." (குற். உலா. ; 22). "மேருமலை வில்லார்." (குற். உலா. 41), "பொன்மலையை நேர்பெற வில்லாக்கிய நாள் (குற். உலா. 93). பிறங்கும்-ஒளிவிடும்.

82. கவுரி-பார்வதி, "கான மலர்க் கூந்தற் கவுரி யிமாசலப்பெண்." (குற். உலா. 94). பவளக்குவடு-மேருமலை.

83. பரிசித்து-ஆராய்து அறியும். கங்கை-கங்காதேவி.

84. தவளப் பெருங்களிறு-ஐராவதம் என்னும் வெள்ளை யானை. களிற்றுத்தோல் போர்த்தது; ஒப், "தும்பிதரு போர்வை" (குற். உலா:89.)

85. காலத்தரி-யமன்.

87. பூசை-ஆகமமுறையானே நடத்தப்படும் திருப்பூசை. மறையோர்-வேதம் ஓதும் அந்தணர். சிவாகாமம்-இருபத்தெட்டு ஆகமங்கள், "சிவாகம மேல் வைக்கு மகுடாகமத் தால், கொற்றத் திருப்பூசை கொண்டருளி." (இலந். உலா:80)

88. நாமம்-புகழ்மிக்க; திருக்காப்புநாண்-அழகிய காப்புக் கயிற்றை கையில் அணிந்து.

8350

பக்கத்திற் பேருறுப்பிற் பத்மராகத்தொகுதி
செக்கர்ப்பொன் னாடை திகழ்வித்துத்-தக்க 89

உயர்ந்த கனகத் தொருபே ருறுப்பில்
வயிரக் குலமவுலி வைத்துப்-பயிராய்ப் 90

யடருந் தளிரிற் படுபே ருறுப்பில்
சுடருமணிக் குண்டலங்கள் தூக்கிப்-படருலகைப் 91

பேணிக் கடன்முகந்து பெய்மேகப் பேருறுப்பில்
மாணிக்கக் கட்டு வடஞ்சாத்தி-யானை 92

வலியினது பேருறுப்பில் வாரிசொரி முத்திற்
பொலியுமிரு கேயூரம் பூட்டி-யொலிபுனற்பேர் 93

சேருறுப்பில் செம்பொன் செறிகடக மிட்டறிவின்
பேருறுப்பி றாரப் பிணைபிணைத்து-நார 64

மொழுகும் திருப்பே ருறுப்பில் பசும்பொன்
மெழுகுதர பந்தம்மேல் வீக்கிப்-பழைய 95

மருந்துவின் பேருறுப்பில் வண்டரளப் பந்தி
திருந்து திருச்சிலம்பு சேர்த்திப்-பொருந்து 96

---

89. செக்கர் பொன்னாடை-சிவந்த பொன்னாலான பட்டாடை.'' பொன் போலும் ஆடை புனைந்தருளி.'' (திருப்பூ. உலா:46.)

90. குலமவுலி-சிறந்த கிரீடம், ''பொன்மலைக்குப் பொன்மௌலி பூட்டுதல் போல்.'' (இலஞ்சி உலா:95).

[89-96] உறுப்பு என்றது இங்கே இடை. சிரம், காது கழுத்து, தோள், கை, வயிறு. பாதம், ஆகியவற்றை குறிக்கும்.

91. சுடருமணிக் குண்டலங்கள்-ஒளிவிடுகின்ற அழகிய குழை, ''மணிமகர குண்டலங்கள் வைத்து'' (திருப்பூ. உலா:49). படருலகம் - விரிந்த உலகம்.

92. கட்டுவடம்-கழுத்தில் கட்டிக் கொள்ளும் பட்டையான ஓர் அணி, ''புடைபோங் களவிடத்தைப் பொங்காமற் கட்டும்'' தடைபோலக் கட்டு வடம் சாத்தி'' (குற். உலா:85) ''துன்னவே கட்டுவடம் கட்டி'' (இலஞ்சி உலா: 94)

93. கேயூரம்-முத்துக்களாலான தோள்வளை; யானை வலி - யானை ஒத்த வலிமையுடைய; பேருறுப்பு-ஈண்டுப்புயங்கள்.

94. ஆரப்பினை-முத்துமாலை; கடகம்-கையணி; மகர மீன் கவ்விய கொடி வடிவுடையது.

95. உதரபந்தம்-வயிற்றில் கட்டும் கச்சு,, ''மின்உதர பந்தனமும் வீக்கியே,'' (இலஞ். உலா;106) வீக்கி-கட்டி.

96. திருச்சிலம்பு-பாதச்சிலம்பு; பந்தித்தல்-கட்டுதல்.

திருக்கடுக்கை யும்பிறவுஞ் செங்குவளைப் போதின்
சுருக்கைத்தன் தோட்புறத்துச் சூடி-யெரித்தநாள் 97

திருச்சாந்து சாத்துதல்

வேழமினங் சுங்கரிய மெய்யிற் புகைதம்மைச்
சூழ நடுவிருந்த தோற்றமோ - மாழை 98

வடிவமதிற் பூசித்த மாவிந்திர நீலப்
படிவ நிழலெறிந்த பண்போ - கடல்வாய்க் 99

கரளத் திருநீல கண்டநிற மெங்கும்
புரளச் சுடர்படிந்த போக்கோ - திரள்புயத்தை 100

மூத்த மகத்தழுவ மூரி மதவாரி
கோத்த கறைநிறைந்த கோலமோ - வாய்த்த 101

வகையீ தெனத்தன் மறையறியா மெய்க்கே
தகைய திருச்சாந்து சாத்தி - அகில்கமழும் 102

சாந்தை முகிலென்று தாழிந் திரவிலெனச்
சேர்ந்த திருவா சிகைகோட்டித் - தோய்ந்த 103

இருவர் மனைவியரு மீன்றவிரு சேயும்
மருவ வகுத்த வகுப்போ - பரிவால் 104

உரிமை யரவுக்கு மொண்புலிக்கும் வெவ்வே
றுருமை நடனம்புரிய வென்றோ - பெருமறையின் 105

---

97. திருக்கடுக்கை-கொன்றைமலர்; செங்குவளைப் போதின் சுருக்கு-செங்குவளை மொட்டுக்களால் தொடுக்கப்பட்ட கண்ணி

98. வேழமினம்-களிற்றினம்; மாழை-பொன்.

99. மாவிந்திர நீலப்படிவம்-நீலக்கல்லால் ஆன சிவலிங்கம்.

100. கரளம் - நஞ்சு; திருநீலகண்டம்-கருத்த மிடறு.

101. மூத்தமக- விநாயகர்; மக-மகவு; மூரி-எருது; மதவாரி-மதயானை.

102. மறை-கறை.

103. திருவாசிகை - திருவாசி; கடவுள் திருவுருவின் பின் வட்டமாகப் பொருத்தப்பட்ட பிரபை; ''ஓங்காரமே நல் திருவாசி'' (உண்-விள) ''வான் வில்லென சீரார் திருவாசிகை'' (இலஞ்-உலா : 110.).

104. இருசேய் - விநாயகர், முருகன்.

105. உரிமை அரவு - பதஞ்சலி முனிவர்; ஒண்புலி - வியாக்கிரபாதர்,

ஈட்டும் வடிவொன் றிரண்டாகி நின்றதெனக்
காட்டுநிழற் கண்ணாடிக் கண்காட்டி - நாட்டுபுகழ்ச் 106

பாடி வருதல்

சோணாட்டிற் காடாய்த் தொழுந்தொண்டை நாடென்னும்
வாணாட்டின் வெற்பாய் வருபாட்டு - மாணுருப்போய் 107

முந்து பனைபழுப்ப முந்நீரிற் கல்மிதப்பச்
சந்துசெலச் சொன்னோர் தமிழ்ப்பாட்டும்-வந்தொருபெண் 108

ஊமைத் திருவா யுரைப்பவுரைத் தோன்பாட்டும்
தாமத் திருச்செவியிற் சாத்தியே - மாமணித்தண் 109

உடன் வருவோர்

டேறித் தடக்கை யெடுத்த திருப்பிரம்பின்
மாறித் திரள்விலக்க வல்லோனும் - நீறணியுஞ் 110

---

106. கண்ணாடி காட்டுதல் - ஒப்பு; (திருப்பூ-உலா : 124); (குற்-உலா : 108); அணிகள் சிறப்பாக அமைந்திருக்கிறதா என்றறியக் கண்ணாடி காட்டுதல் மரபு.

107. சோழன் + நாடு > சோணாடு - மரு உ; வாழ் + நாடு > வாணாடு- மரு உ.

108. ஆண் உருப்போய், முந்து பனை பழுப்ப – திருவோத்தூரில் சம்பந்தர் ஆண் பனையைப் பெண் பனையாக்கிய வரலாறு சுட்டப்படுகிறது. "குரும்பை ஆண் பனை ஈன்குலை யோத்தூர்" (சம்-திருக்கடைக்காப்பு); "பெண் ஆக்கும் தாலத்தான்" (குற்-உலா : 428); முந்நீரிற்கல் மிதப்ப - திருநாவுக்கரசர் கருங் கல்லை மிதக்கச் செய்தது சுட்டப்படுகிறது; "கல்லாம் புணையாம்" (குற்-உலா. காப்பு-3); சந்து செயலச் சொன்னோன் - சுந்தரர் இறைவனைப் பரவை பால் தூது அனுப்பிய வரலாறு சுட்டப்படுகிறது; "நம்பரனைத் தூது கொண்ட: மிக்கதமிழ்ச் சோணாடு" (குற்-உலா : 31) "அல்லென்றும் பாராம லாண்ட வனைப் பெண்தூது செல்லென்று சொல்லிவிட்ட தோழன்" (குற்-உலா : 116).

109. ஊமைப்பெண்ணைப் பேச வைத்தது:- மாணிக்கவாசகர், தில்லையில் ஊமைப் பெண்ணைப் பேசவைத்த வரலாறு சுட்டப்படுகிறது; "வல்லூமை பேசுமா மக்கவிகள் பேசுவித்தார்" (குற்-உலா. காப் : 3).

107-109. சுந்தரர், நாவுக்கரசர், சம்பந்தர் அருளிய தேவாரமும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருச்சூழலும் பாடப் படுகிறது; "வேதமொழி ஒருந் தமிழு மொருவன் மொழி வாசகமும்" (இலஞ்-உலா : 111 "தண்டாத தேவாரப் பண்ணும் திருவாசகத் தமிழும்...கொண் டருளி") (குற்-உலா : 108-110).

110. திரள் விலக்க வல்லோன் - கூட்டத்தை விலக்கவல்ல நந்தி; "நரம் போசை தெய்வ நந்தி நம்பிரான் செங்கைப் பிரம்போசையோடும் பிறங்க" (திரு-பூ. உலா ; 63),

செய்யதிரு மேனி தியாளித் திருந்தெமது
கையதிரும் போதுணர்ந்து காண்போனும்-வைகையின்பால் 111

விண்ணா யிரக்கதிரோன் வீர மகனருந்த
வெண்ணா யிரஞ்சமணை யிட்டோனும் - நண்ணாத 112

கூற்றுதைத்த தாளைக் குறித்துப் பொறித்தழல்வாய்
நீற்றறையில் மெய்குளிர்ந்து நின்றோனும் - சாற்றுபதக் 113

கட்டுக் கவிபாடிக் கண்ட பொருளாற்றில்
இட்டுக் குளத்தி லெடுத்தோனும் - வெட்டுதலை 114

யோடு பிடித்தைய முண்டகரங் கோவைக்கன்
றோடு பிடிக்க விசைந்தோனும் - பாடவல்ல 115

பத்திரனுக் காகப் பணித்த திருமுகத்தாற்
கைத்திரவி யஞ்சொரிந்த கற்பகமு- மத்தெருவின் 116

ஆக்கன்றை யூர்ந்த வடுபழிக்குத் தேர்க்காலிற்
கோக்கன்றை யூர்ந்த குலத்தரசும் - மாக்கயமே 117

---

111. கை அதிரும்போது காண்போன் - சண்டிகேஸ்வரர்.

112. எண்ணாயிரம் சமனை இட்டவன் - திருஞான சம்பந்தர்; சமண் - சமணர்கள்.

113. கூற்றுதைத்த தாள்-கூற்றுவனைஉதைத்த சிவனது திருப்பாதம்; நீற்றறையில் மெய் குளிர்ந்து நின்றவர்-நாவுக்கரசர். இவரை மகேந்திரவர்மன் நீற்றறையில் போட்டும் ஏழு நாட்களுக்குப்பின் எவ்வகை ஊனமுமின்றி உவகையோடு வெளிவந்தார் என்பர்.

114. பொருளைக் குளத்திலெடுத்தோன்-சுந்தரர். திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாறில் 12 ஆயிரம் பொன்னையிட்டுத் திருவாரூர்க் கமலாயத்தில் எடுத்தது.

116. பத்திரனுக்காக கைத்திரவியம் சொரிந்தவர்-சேரமான் பெருமாள். இவ்வரலாற்றை திருவிளையாடற் புராணத்தில் திருமுகம் கொடுத்த படலத்தில் காணலாம்; "பாட்டுக் கிரங்கியொரு பாணனுக்குச் சேரலன் மேற் சீட்டுக் கவிவிடுத்த சீராட்டும்," (தமிழ். விடு : 117); "பாவலன்பாற் பாணனுக்குப் பாட்டெழுதும் சீட்டுப் புரவலன்பால் விட்ட புலவன்." (குற். உலா:60).

117. கோக்கன்றை யூர்ந்த குலத்தரசு-பசுவின் கன்றை யூர்ந்த மனுநீதி சோழன்; "சிந்தனையாவிற்கு முற்றத் திருத்தேரில், மைந்தனை யூர்ந்த மற வோனும்," (விக். உலா:4,) "வருளு பசுவொன்றின் மம்மர் நோய் தீர உரு ளுந் திருத்தே ரூரவோன்." (குலோ. உலா;2); "ஆவினது கன்று நிகரென், தெவ்வருக்க மும்வியப்ப முறைசெய்த கதை" (கலி. பரணி:இராசப்:10); வெய்யோனும், செம்மலைப் பண்டூர்ந்த தேரோனும்." (சங்கர:3).

காவியை யீந்த கவினா ரிடைமருதில்
தேவியை யீந்த திசாபதியும் - பாவித்துப் 118

பூசிக்குஞ் சைவப் புனிதச் சுருதியரும்,
நேசிக்குந் தானமென நிற்போரும் - ஈசற்குத் 119

தேவர்பாட் டென்னுந் திருஞானத் தேனொழுக
மூவர்பாட் டோது முனிவோரும் - சேவுயர்த்தோன் 120

முற்பகனூல் சொன்ன முறையி னெறிதிறம்பா
பற்பலவே றுள்ள பரிசனமும் - கற்பதனாற் 121

சேவித் திருபாதச் செந்தா மரைபரவத்
தூவித் திருக்கோயிற் சுற்றகன்று - காவத் 122

தெருப்புகுந்து தேவர் திரள்முனிவர் வெள்ள
மருப்புகுந்து பூமாரி வார - நெருப்புண்கண் 123

தேரில் இறைவன் எழுந்தருளுதல்

பூதக் கடலும் புறநின் றரகரவென்
றோதக்கடலு மொலி யடங்க-மாதிகிரி 124

ஓங்கு முழக்கா லுததித் திரண்மணிகள்
ஓங்கு முழக்கா லிடிக்குழாம்-தாங்கு 125

---

118. காவி-ஆடை; கவின்-அழகு; திசாபதி-வரகுணபாண்டியன்; திருவிடைமருதூரில் வரகுணபாண்டியன் தன் மனைவியை இறைவனுக்கு அளித்த வரலாறு சுட்டப்படுகிறது.'' தேவியெனக் கண்டுமொரு தேவியைநம் தேவனுக்கே ஆவியெனக் கைக்கொடுத்த வண்ணல்.'' (குற். உலா. 119) ''விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று, புரிகுழல்தேவியைப் பரிவுடன் கொடுத்த பெரிய வன்பின் வரகுணதேவர்.'' (திருவிடை. மும்மணி. கோவை. 28)

119. சுருதியர்-அடியவர்.

120. மூவர் பாட்டோதும் முனிவோர்-தேவார ஓதுவார். சேவுயர்த்தோன்-விடைக்கொடியை உயர்த்தியவன், சிவன்.

121. பரிசனம்-ஏவல் செய்வோர்.

123. அருப்புகுந்து-அணுத்திரளென நெருங்கி புகுந்து: நெருப்புண்கண்-நெருப்பு உண் கண்; அனலைக்கக்கும் கண்கள்.

124. பூதக் கடல் - கடல் போன்ற பூதக்கூட்டம்; உததி - கடல்,

மிடத்தாற் கனபுவன மிட்ட நவரத்ன
வடத்தாற் பொறியுரக வர்க்கம்-விடைக்கொடிமீ 126

தாடுகையாற் றென்ற லலங்குபிறை யாடிபல
சூடுகையாற் றிங்களுடுச் சூழ்முகடு-கோடகையும் 127

நீட்சி முடியா னிலமளந்தோன் நீளமென
மாட்சி தரும்திருத்தேர் வந்தேறிக்-காட்சியலங் 128

காரக் கடவுளர்தங் கைம்முளரிக் கம்மறிய
நேரக் கவிகை நிலாக்கவிய-வீரருக்கும் 129

வீசுங் கவரி வெளுப்பாலெப் பாவையரும்
பேசுங் கலைமகளாய்ப் பேதிப்பப்-பூசித்தன் 130

தாலாலே சேடரெடுத் தாடுபடம் போலுபயப்
பாலலே வட்டம் பணிமாற-ஞாலமெலாம் 131

கொடி ஏந்திச் செல்லுதல்

பூத்த கொடி பார்த்தன் புணர்ந்த கொடி தம்பிறப்பின்
மூத்தகொடி யண்ட முகடோங்க-வேத்தச் 132

---

126. உரகம் - பாம்பு; விடைக்கொடி - சிவபெருமானுக்குரிய இடபக் கொடி.

127. முகடு - உச்சி; திங்களுடுச் சூழ் முகடு - திங்களைச் சூழ்ந்த நட்சத் திரக் கூட்டத்தை ஒப்ப, பல மணிகள் பதிக்கப்பட்ட திருத்தேரின் முகடு.

128. நீட்சி முடியா னியமளத்தோன் - ஈரடியால் மூவுலகமளந்த திருமால்; ''ஈரடியான் மூவுலகுங் கொண்டானை'' (இரா-உலா : 216); ''இரு நிலம் தாளால் அளந்து தரும் பெரியோன்'' (மே-ப : 318).

129. கைம்முளரி...நேரக்கவிகை-கைத்தாமரை போன்ற குடை;(சிலேடை. அணி).

130. கலைமகள் - சரஸ்வதி; பேதிப்ப - மாறுபடத் தோன்ற.

131. சேடன் - ஆதிசேடன்; உபய ஆலவட்டம்...பணிமாற - இருபுறமும் விசிறி வீச. ஒப்பு : ''ஆலவட்டம் நீடரவம் போல வெதிர் நின்றாட'' (தமிழ்-விடு : 242).

132. பார்த்தன் புணர்ந்த கொடி - அருச்சுனன் புணர்ந்த கொடி - அல்லிக் கொடி; சிலேடையாக மலர்க்கொடிக்கு உருவகிக்கப்படுகிறது; தம் பிறப்பின் மூத்த கொடி - தாமரை,

திருவுலாக் காட்சி

சிறந்தே யிருபுட் சிரத்தாற் சரணப்
புறந்தேய் மழவிடைமுன் போகக்-கறங்குமத 133

முக்கட் கரிவதனன் மூடிகமும் செம்மயிலு
மக்கட் கமலமுனி யன்னமும்-சக்கரத்தோன் 134

புள்ளு மொருபன் னிருவர் பொலந்தேரும்
துள்ளு பதினொருவர் தொல்லெருதும்-தள்ளா 135

விருவரோ ரெண்ம ரெழுவர் திசாங்கத்
தொருவர் விமானத் தொழுங்கும்-பரிபுரத்தாட் 136

கைக்காரி நாமத் தவர்ஞானி யுங்களிறு
மைக்கார் மதனூரு மாருதமும்-திக்காளர் 137

நாகமை மேதி நரமகர-மீனிரலை
பாகமையும் புட்பகமும் பாயேறு-மாகமும் 138

---

133. இருபுள் - அன்னம், கருடன்; மழவிடை - விருஷப தேவர்; ''விடை நம்பிரான் முன்னே நடந்தேக'' (குற்-உலா : 130)

134. கரிவதனன் - விநாயகன்; மூடிகம் - பெருச்சாளி வாகனம்; செம் மயில் - முருகனது மயில் வாகனம்; கமலமுனி அன்னம் – பிரமனது ஊர்தியாகிய அன்னம்; ''ஊமனையும் அன்னத் தேரேறி அயன்'' (திருப் பூ-உலா. 74) சக்கரத் தோன்புள் - திருமாலின் கருட வாகனம்.

135. பதினொருவர் தொல்லெருது - சிவன் போலும் தோற்றமுடைய பதினொரு உருத்திரர் இடப வாகனங்கள்; ''செவ்வரசர் பன்னொன்று சேவேற'' (குற்-உலா. 132). பன்னிருவர் - பன்னிரு சூரியர்: திங்கள் தோறும் ஒவ்வோரு சூரியர் தோன்றுவர்.

136. இருவர் - மருத்துவர் இருவர்; எண்மர் - எட்டு வசுக்கள்; எழுவர் - ஏழு முனிவர்கள்; ''ஏழ் முனிவர் எண்மர் இருவர் ஒருதனிதம் தாழ்வில் விமானம் செல்ல''. (திருப்பூ. உலா. 81). ''இருவரெண்மர் பதினொருவர் பன்னிருவரெனும் விண்ணவர்கள் முப்பத்து மூவரே'' (மீ. பிள். தமிழ்).

137. கைக்காரி ...களிறு-சாத்தன் தன் யானை வாகனம்; மைக்கார் மாருதம்-தென்றல் காற்றாகிய தேரை வாகனமாக வுடைய மன்மதன்; திக்காளர்-காவலனாகிய நிருதி.

138. நரமகரம்-நரன் என்னும் யக்சனாகிய வாகனம்; புட்பகம்- குபேர னுக்குரிய புஷ்பக விமானம்,

பாரு நெருங்கப் பதினெண் கணத்துள்ள
யாரும் நெருங்க விருமருங்கும்-நீர்மகளும் 139

பார்ப்பதியும் தம்பதியைப் பார்க்குந் தொறும்தமைத்தான்
சேற்பதியுங் கண்கள் சிவந்துவரக்-காற்பதுமப் 140

பூமகளும் பார்மகளும் பொன்னகரக் கோமகளும்
பாமகளும் திங்கட் பதிமகளும்-யாமளையு 141

மேழ்வகைமின் னாரும் எழுநதியின் மானாரும்
சூழ்வகையி னெல்லோருஞ் சூழ்ந்துதொழ - யாழ்வரையின் 142

கந்திருவர் பாடவிரு காது திருப்பதியாய்
முந்திருவர் கீத முடிதுளக்கத் - துத்துபியும் 143

வாத்திய வகைகளின் முழக்கம்

பேரியும் வேயும் பெருஞ்சங்கும் வங்கியமும்
வாரி முரசும் வயிரியமுந் - தாரை 144

---

139. பதினென்கணம்-பதினெட்டு வகைப்பட்ட தேவ கணத்தார்; "தேவரும் அசுரரும், முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும், இயக்கரும் இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், வித்யாதரரும், நாகரும், பூதரும், வேதாளரும், தாராகணமும். ஆகாசவாசிகளும், போகபூமியோரும் என பதினெண் கணமாம்." (புற. க 10. உரை) நீர்மகள்-கங்கை.

140. பார்ப்பதி - பார்வதி; சேற்பதி-சேல்பதி; கண்கள்-சேல் போன்று ஒன்றோடொன்று எதிர்க்கும் கண்கள்.

141. பூமகள்-இலக்குமி; பார்மகள்-ஏழு வித்யாதத்துவம் என்னும் தெய்வ மகளிர்; "பூமகளும் மேழுகலைப் பூமகளும்; (குற். உலா. 144) பொன்னகரக் கோமகள்-இந்திராணி; திங்கட்பதிமகள்-சந்திரனுக்குரிய இருபத்தேழு நட்சத்திர மாதர்கள்; யாமளை-காளிதேவி.

142. ஏழ்வகை மின்னார்-சப்த கன்னியர்; எழுநதிமானார்-நதிமாதர் எழுவர்; கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவிரி, ஆகியவை தாய்போல் உலகுயிர்களைக் காத்தலால் பெண்மை உருவாகக் கூறுதல் கவிமரபு. "பொங்குநதி மாதர்." (திருப்பூ. உலா:119); கங்கை முதலோரெழுவர்," (குற். உலா:147).

143. கந்திருவர்-கந்தர்வர்; சிவபெருமானின் காதில் குண்டலங்களாக இருந்து இசை ஒலிப்போர். "ஆடிய தாளு மதற்கிசைய நின்றிருவர் பாடிய காதுங் கருணைப் பார்வையும்." (குற். உலா:228). துந்துபி-துந்துமி என்னும் வாத்தியம்.

144. பேரி-பேரிகை; வேய்-மூங்கில்குழல்; வங்கியம்-இசைக்குழல்; வாரி-இசைக்குழல்; முரசு-போர்முரசு: "வெற்றி முரசும் விளங்கும் குடமுழவும், சுற்றிய வார்ப்பேரிகையும் துந்துமியும்." (குலசை. உலா:102) வயிர்-ஊது கொம்பு; தாரை-எக்காளம்,

பதலை முழவுதுடி பம்பை படகம்
முதலை முதியு முழங்கப் - பதவி 145

விருது கூறல்

தருவி புதகுலத்துத் தம்பிரான் வந்தான்
மருவுமடி யார்க்கெளியான் வந்தான் - இரதி 146

நிலைச்சித்ர காந்தனையே நீறுசெய்தான் வந்தான்
மலைச்சித்ர கூடத்தான் வந்தான் - நிலைத்துக் 147

கனமலையா மற்காத்த காளகண்டன் வந்தான்
வனமுலையாள் பாகத்தான் வந்தான் - முனிவு 148

தருநாளிற் கூற்றுதைத்தான் றான்வந்தா னூழி
வருநாளுங் கேடிலான் வந்தான் - திரிபதகை 149

வெளவப் படுமகுடன் வந்தான்வந் தானென்று
தெய்வத் திருச்சின்னஞ் சேவிப்பப் - பெளவத்தின் 150

வந்த பலவகை மகளிர் கூட்டம்

எண்மடங்கு மிக்க தெனப்பவனிக் கேதனத்தின்
விண்மடங்கு வீதி வெளிப்படலு - முண்மை 151

தெளித்த வறஞ்சொன்னார் திண்சிலைக்கு முன்னால்
அளித்த மடமாத ராரும் - விளக்க 152

---

145. பதலை-ஒருகட்பறை; முழவு-குடமுழா; துடி-குறிஞ்சிப்பாறை; பம்பை-முல்லைப்பறை; படகம் -போர்ப்பறை; முதலை - முதலைப்பறை; முதி-நிலப்பறை.

146. விபுதர்குலம்-தேவர்குலம்.

147. சித்ரகாந்தன் - மன்மதன்; நீறு செய்தான் - எரித்தவன்.

148. காளகண்டன் - விடமுண்ட கண்டத்தன்; வனமுலையாள் - உமையம்மை.

149. கூற்றுதைத்தான் - இயமனை அழித்தவன்; ''செகஉயிர் சமனை தடித்தோன்'; (திரு- புரா : 455) ''அற்ற தந்தண னிருக்கு நளினி யழிப்ப னென்று வரு காலனைச் செற்றடைந்த சிவற்களித்த'', (திரு-புரா : 510); கேடிலான் - கேடிலியப்பர்; திரிபதகை - கங்கை.

150. வெளவப்படுமகுடன்-விரும்பிக்குடியிருக்கும் சடா மகுடத்தை உடையவன்; சேவிப்ப - முழங்க; பெளவம் - கடல்.

151. கேதனம் - பெருங்கொடி.

152. தெளித்த அறம் சொன்னார் - ஆலநிழலில் அறம் உரைத்த அண்ணல்; திண்சிலை - மேருவாகிய வில்.

மடுத்ததொரு நாணுக்கு மிவ்விருவ ருக்கும்
கொடுத்த உலகிற் குலமும் - இடப்புறத்துத் 153

தாரந் தருதவத்துத் தையலரும் போனகத்தின்
வாரந் தருதலத்து வல்லியரும் - ஈரேழ் 154

படிவழகுஞ் சீரிளைய பாலர்க்கு மூத்த
குடிவழங்கு மூர்ப்பெண் குழாமும் - கடவுட் 155

பெருமா னிரந்துண்ணப் பேருண் கலத்தைத்
தருமா னகர்ப்பே தையருந் - திரிபுரத்தி 156

னேவுதவு வீர னினிதேற வேறென்று
மாவுதவும் பொறப்பதியின் மங்கையரும் - மேவுதலும் 157

மன்று திருத்தே ரவர்க்கீந்த பேரிடத்துந்
துன்று மடவார் தொகையெல்லாம் - தென்றல் 158

மறுகுங் கடிமதிலு மண்டபமு மன்றும்
குறுகும் படிமிடைந்து கூடிப் - பிறைவெண் 159

மகளிர் வணங்குதல்

கொழுந்தும் பகீரதியும் கோடீரக் கொத்தும் 160
அழுந்துங் கடுக்கை யழகும் - செழுந்திருநீறு

---

153. உலகிற் குலம் – புவி மகளிர்; 'ஞானத்து மங்கையர்' (குற்.உலா ;159).

154. இடப்புறத்து தாரம் - உமா தேவி: தவத்து தையலர் - உமாதேவி யாரின் சேடியார்; போனக...வல்லியர் - இந்திர லோகத்து மாதர்கள்.

156. மாநகர்ப் பேதையர் - பிரம்ம லோகத்துப் பெண்கள்.

157. திரிபுரத்தி...பொறப்பதியின் மங்கையர் - திரிபுரத்தை எரிக்க அம்பாக வந்த திருமாலின் வைகுண்டலோகத்து மங்கையர். "சங்கமுடன் ஓர் ஆழி ஏந்தும் உயர் கொடியும்" (குற்-உலா : 470); திருமால் இடபமாகிச் சிவபெருமான் வாகனமாகவும், கொடியாகவும், அம்பாகவும், உள்ளார் என்பது புராண வரலாறு.

158. மடவார் தொகை - திருக்கீழ்வேளூர்ப் பெண்கள்.

159. மறுகு - நெடுந்தெரு: கடி - காவல்; மிடைந்து - நெருங்கி.

160. பகீரதி-கங்கை; பகீரதன் கொண்டு வந்தால் பாகீரதி என பெயர் பெற்றது. ',பகீரதற்குப் பரிந்து முன்னால் சுரநதியை வார்சடைமேல் ஏற்று விட மண்ணின் கண்ணே" (திரு. புரா. 191)

இட்ட நுதலு மிருகாமர் பொற்காதும்
வட்ட மதியமுத வான்முகமும் - விட்டெறிக்கும் 161

கண்மலரும் புன்முறுவற் கன்னிச் சிறுநிலவும்
பண்மலரும் செவ்வாய்ப் பவளமும் - மண்முழுதும் 162

காத்த திருநீல கண்டமும் திண்தோளும்
சேர்த்த புரிநூல் திருவழகும் - சாத்தும் 163

திருமேனி தாழ்வடமுஞ் செஞ்சாந்து மார்பும்
பெருமேனிச் சோதிப் பிழம்பும் - பரமர் 174

உவந்தமழுக் கையு முரகமணிக் கச்சும்
சிவந்ததிருத் தாளும் சிலம்பும் - கவிழ்ந்து 165

தெரிசித் ததிசயித்துச் சேவேறிக் கன்பு
புரிசிந்தை நைந்து புகழ்ந்து - பரசிப் 166

மகளிர் பாராட்டு

புவனிக்கு முத்தி பொருந்தும் திருப்பேர்ப்
பவனித் திருவெழுச்சி பாரீர்! - நவநீத 167

முண்டே வளர்ந்தா ருடையார்க் கொருவிடையாய்த்
திண்டேர்முன் செல்லுஞ் செயல்பாரீர் - பண்டொன்றாய் 168

வைத்த திருமால் வரவரும்பா லாழியென
நித்தர் குடைக்கீழ் நிழல்பாரீர்! - அத்தர்மீ 169

---

191. கோடீரம்-சடை; கடுக்கை - கொன்றைமாலை. "பொருந்து திருக்கடுக்கை." (மேற்படி:97), "அங்கட் கடுக்கை." (அப்பர்:4:831).

161. காமர் பொற்காது-விரும்பப்படும் பொற்குண்டலங்ளைக் கொண்ட காது.

162. கன்னிச் சிறுநிலவு-மூன்றாம் பிறை; பன்மலரும்-இசைமலரும்.

163. திருநீலகண்டம் - விடத்தால் நீலநிறமான கண்டம். "கறுத்தார் மணிகண்டம்." (அப்பர்:4:165). புரிநூல்-யக்ஞோபவிதம்; முப்புரி நூலாகிய பூணூல் "தயங்கு புரி நூல்." (குற். உலா:172)

164. தாழ்வடம்-உருத்திரக்கமாலை.

165. உரகம்-பாம்பு.

166. சேவேறி - எருதை வாகனமாக உடையவன்; பரசி - வணங்கி;

167. நவநீதம் உண்டே வளர்ந்தார் - திருமால்; நவநீதம் - வெண்ணெய்; திருப்பேர்ப் பவனி - இறைவன் திருவுலா.

169. பாலாழி - திருப்பாற் கடல்போன்ற குடை

தேற்கும் பிறைநிறைவ தெப்போழ்தென் றண்ணாந்து
பார்க்கும் பணியின் பணிபாரீர்! - நாற்கையினால் 170

ஓங்குங் களிறு மொருகேழ லும்பொருது
வாங்குந் தரள வடம்பாரீர்! - பூங்கொடியீர் 171

வாரீ ரிலந்தை வனத்தார் திருவழகைப்
பாரீ ரெதிர்போய்ப் பணிந்தென்பார் - பூரணரைப் 172

பண்ணீர் மொழியீர்நாம் பாராமற் கங்கையுநம்
கண்ணீராய் மூடினளோ காய்ந்தென்பார் - அண்ணவார் 173

தேரொடுந் தூளோடுஞ் சேர்ந்தே நமதுண்கண்
நீராடும் போது நிலாதென்பார் - ஓர்கூடல் 174

மட்டார் வணிகர் மகளிருக்கும் கைவளையல்
இட்டார் நமைப்பறித்தா ரின்றென்பார் - பட்டாடை 175

செம்பையொருத் திக்குத் திருப்பனந்தா ளிற்காத்தா
ரெம்பை யுடைகவர்ந்தா ரீங்கென்பார் - பெம்மாற்குத் 176

---

170. தற்குறிப்பேற்ற அணி; பணி - பாம்பு; பணி - படம்; "பல்விவிட போகா பணி நஞ்சு" (திரு-பூ. உலா : 172); நாற்கை - தொங்கும்கை (துதிக்கை).

171. தரளவடம் - முத்துவடம்; கேழல் - பன்றி.

172. பூரணர் - முழுமுதற் கடவுள். காய்தல் - கோபப்படுதல்.

174. நிலாது - நில்லாதென்பதன் இடைக்குறை; ஒப்: "தேரோட ஓடப்பின் சென்றோடி; ஓடிக்கண், நீரோட ஓடநின்று நெட்டுயிர்ப்பார்" (திரு-பூ. உலா: 155).

175. கூடல் - மதுரை; வணிக மகளிருக்கு வளையல் இட்டது: சிவபெருமானின் அழகைக் கண்டு மயங்கிய தாருகாவனத்து முனிபத்தினிகளை முனிவர்கள் மதுரையில் வணிக மகளிராகப் பிறக்க எனச் சாபமிட்டனர்; சிவபிரான் வளையல் வணிகராகி, அப்பெண்களுக்கு வளையல் இட்டு மறைந்தார்; இறைவன் கரம் பட்டதால் அப்பெண்கள் கருவுற்று நன் மக்களைப் பெற்றனர்.

176. திருப்பனந்தாளில் உடைக்காத்தது - திருப்பனந்தாளில் தாடகை என்ற ஆதிசைவ மாது தினமும் ஆயிரம் பூக்களால் பூசை செய்து வந்தாள்; ஒரு நாள் இவ்வாறு வழிபாடு செய்துகொண்டிருந்த போது அவளுடைய ஆடை நெகிழ்ந்தது; ஆடையை பிடிப்பதா? வழிபாட்டைத் தொடர்வதா? என்று புரியாமல் தவித்தாள். அவளது நிலை கண்டு தன் தலையைச் சாய்த்து மாலையை ஏற்றுக் கொண்டார் என்பது வரலாறு. இதன் பின் வரலாறாக குங்கிலிய நாயனாரின் வரலாற்றை இணைத்துக் கூறுவர்.

துற்றபெருந் தாருவனத் தோகையரு நாமுமே
குற்றமிகச் செய்த குடியென்பார் - உற்றிவரை 177

நேர்வளையப் பார்ப்பதற்கு நின்றுநின்று போமென்று
தேர்வளையத் தாழ்வோர் திரண்டென்பார்-போர்வேளைத் 178

தீய்த்த வரிய திருமேனி கன்னிக்கு
வாய்த்தபடி யெப்படியோ வந்ததென்பார்-பார்த்தளவிற் 179

பூத்தார் குழலாள் புணர்ந்த வகைவிரும்பி
கூத்தாற் கிடைத்த குலாவென்பார் - மாத்தேரின் 180

முன்னமொரு பங்குபெற மொய்விரதம் செய்கென்று
சொன்னமுனி யாரோ தொழவென்பார் - இந்நெறியே 181

மகளிர் முறையீடு

மன்னியெதிர் நின்று வயற்காஞ் சியலுதவு
கன்னிமிதித் தாடநடுங் கம்பமே - இன்னிசையின் 182

வண்டார் கயிலையிலே மாரனா ரைக்காத்துக்
கண்டாற் கல்லா லடிக்கரும்பே - விண்டோய் 183

வெளிறீனு நாவலின்கீழ் வீற்றிருந்து முக்கட்
களிறீனு மென்னானைக் கன்றே - பிளிறிக் 184

கொழித்த முரசதிருங் குற்றாலத் தன்பு
பழுத்த பலவின் பழமே - கழுக்குன்றில் 185

---

177. போர்வேள் - மன்மதன்.

179. தீய்த்து - எரித்து.

182. காஞ்சி - காஞ்சீபுரம்; மாரன்-காமன்; கல்லாலடி - கல்லாலநிழலில் எழுந்தருளியுள்ள இறைவன்; கரும்பு-இறைவனைக் கரும்பாகச் சித்தரிப்பது இலக்கிய மரபு: "ஆரென்றாள் கல்லால் அடிக்கரும் பென்றா ரதனைத், தாருமெனக் கென்னத் தாய்மாரும் நேரிழையே, இந்தக் கரும்பெவர்க்கும் எய்தாக் கரும்பு காண்" (திருக்கா. உலா).

184. ஆனைக்கன்று - திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள இறைவன். "என் ஆனைக் கன்றினை" என்பர் அப்பர்.

185, குற்றாலத் தன்பு பழுத்த பலவின் பழம் - குறும் பலாமரத்தின் அடியில் எழுந்தருளியுள்ள இறைவன், "பெறும் பலவின் மூலப் பிரணவ மூடான குறும்பலவின் மூலக் கொழுந்" (குற் உலா: 15) "சன்ம விடா யாற்றும் திருக் குறும் பலவுறையுஞ் செல்வன்" (வட. விறலி தூது : 239). கழுக்குன்று - திருக் கழுக்குன்றம்.

பண்டுதிரு வாதவூர்ப் பத்தன்கண் ச...திப்பக்
கண்டு தொழுங்கரும்புக் கட்டியே - வண்டு 186

திளைத்த பழனத் திருநெல்வே லிக்குள்
முளைத்த தொருவேயின் முத்தே - களிப்பி 187

னமர்ந்த மழைவையின்க ணம்மூவர் பாட்டுஞ்
சுமந்த தொருவயிரத் தூணே - யமைந்த 188

வினத்தி லடியா ரிருநோய்க் கிலந்தை
வனத்தி லிருந்த மருந்தே - யனைத்துந்தன் 189

இச்சை வனமுலையா ளென்னு மொருபழைய
பச்சையுடன் கட்டு பவளமே - நச்சித் 190

துதித்தவோர் செட்டியிரு தூக்குநிலை நோக்கி
மதித்தகே டில்லா மணியே -முதற்குறியோன் 191

போலே யவன்மலைக்கால் புக்கிறைஞ்ச வந்தாலென்
மேலே எரிசொரிய வேண்டுமோ - சாலச் 192

சொரிந்தா லுமைமுன் றொழுதவுர கேசன்
அருந்தா திருப்ப தறமோ - பெரும்புணரி 193

---

186. திருவாதவூர்ப் பத்தன் - மாணிக்கவாசகர்.

187. திருநெல்வேலி...வேயின் முத்து-திருநெல்வேலியில் மூங்கிலில் முளைத்த முத்து. வரலாறு :- ஒரு நாள் மன்னருக்குப் பால் கொண்டு வரும் இடையனை மூங்கில் தடுக்கிப் பால் சிதறும்படி செய்தது. இதை அரசன் அறிந்து மூங்கிலை வெட்டும்படி ஆணையிட்டான். காவலர் மூங்கிலை வெட்டும்போது மூங்கிலில் சிவபிரான் தோன்றினார் என்பது வரலாறு. "வேயீன்ற முத்தே" (இரட்டையர்

188. மழைவை-திருமழபாடி.

189. இலந்தை வனத்திலிருந்தே-கீழ் வேளூரில் இலந்தைவனத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்; மருந்து-சிங்கத்துவஜன், காட்டரசன், என்ற இரு அரசர்கள், முனிவர்களது சாபத்தால் கழுதைகளாக மாறித்திரிந்தனர். அவர்கள் இத்தலம் சார்ந்து பிரம்ம தீர்த்தத்தில் மூழ்கிப்பிறவிப் பெருநோய் நீங்கிப் பரமுத்தியடைந்தனர் என்பது வரலாறு.

190. பச்சை-மரகதம்; வனமுலைநாயகி-கீழ்வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவியின் திருநாமம்.

191. செட்டியை மதித்தது: மாவீர்யன் என்ற ஆட்டு வணிகன்; இத்தலம் சார்ந்து முத்தி அடைந்த வரலாறு சுட்டப்படுகிறது.

193, உரகேசன்-ஆதிசேடன்; முன்தொழுத உரகேசன்-ஆதிசே ன் இறைவனைத் தொழுது ஆண்மை பெற்ற வரலாறு சுட்டப்படுகிறது. பெரும்புணரி-தாழமாகிய பெருங்கடல்.

யும்மகத்தைத் தீங்குசெயா தோடுவதும் மைத்தொழுதே
வெம்மதத்தைத் தீங்குசெய்வ தேற்குமோ - நம்மகத்தைத் 194

தீங்குசெயி னிப்பதியிற் செய்தவத்தான் கைவடிவேல்
வீங்கு திரைபருக வேண்டாவோ - ஈங்கெதிரே 195

போது மெமையும்மைப் பூசித்த கேசவர்முன்
ஊதுங் குழல்வருத்த வொண்ணுமோ - தூது 196

விடுநா ளுமைத்தொழுந்தீ யேனைத் துளைவாய்
சுடுநண் முழுதுஞ் சுடாதோ - கொடுவேசி 197

தாளுந் தொழுவெழுதுஞ் சாதனத் தொண்டர்க்கோ
வாளுங் கோவா வீரமரமே - தோளிணைக்கே 198

தூங்குமகப் பயந்தாள் சோரத்தி லென்னவழு
தேங்குபெண்ணுக் கல்லா திரங்கீரோ - நாங்கள் 199

வளரும் பவனிதொழ வந்தா லெமது
இளருமட நாணங் கெடுத்தீர் - உளமகிழ்ந்து 200

கேடிலியை நாடுபவர் கேடிலா ரென்றதிருப்
பாடலுமக் கன்றோ பரமரே - கூட 201

வொருக்கா னினையீ ருவந்தென்னச் செந்தேன்
முருக்கா லொழுக மொழிவார் - திருப்புணரு 202

மம்மீன் விழிதரித்த வங்கமெலாம் பார்வையால்
தம்மீன் விழியைத் தரிப்பிப்பார் - மொய்ம்மீனின் 203

---

196. கேசவர்-முராரியான திருமால், நரகாசுரனைக் கொன்ற பாவம் போக வழிபட்ட வரலாறு சுட்டப்படுகிறது.

199. மகப் பயந்தாள்-மகளை ஈன்றவள். இங்கு மழுவெறிந்து கண்டித்த வரலாறு சுட்டப்படுகிறது. பார்க்க-கண்ணி: 45-49

200. மட நாணம்-மகளிருக்குள்ள நான்கு குணங்களில் ஒன்று; உளம் - உள்ளம் என்பதன் இடைக்குறை.

201. கேடிலியை... கேடிலார்.- கீழ் வேளூர் கேடிலியப்பனை நாடி செல்வோருக்குக் கேடுகள் அணுகாது. நாவுக்கரசரின் பதிகங்களின் இறுதி அடிகளை மேற்கோளாகச் சுட்டிக் காட்டுகிறார். "மாசு களைவானைக் கீழ்வேளூ ராளுங் கோனைக் கேடிலியை நாடுபவர் கேடிலாரே" (அப் : 6 : 3)

202. முருக்கால்-உருதப்படி.

203. விழிதரித்த வங்கம்-ஆயிரம் கண்ணுடைய அங்கத்தோன்; இந்திரன்.

மாக மதியுரைத்த வார்குழலார் பாவித்த
மோக மதியுரைத்து முன்னிற்பா · ராகமதன் 204

தீதையார் கின்ற சிலையாலிவ் வாறலையுங்
கோதையார் தங்கள் குழாத்தொருத்தி - பேதை 205

பேதை
இயற்கைத் தன்மை

தனுமலையன் கையர் தமதுசித்ர கூட
மெனுமவையின் வைகுமிளந் தென்றல் - தனிமதனைச் 206

செற்றா ரிருப்பத் திருவிலந்தை வந்ததென
முற்றா வமுதின் முளைத்தமுளை - மற்று 207

மொருவரையு மொவ்வா துபயநடங் கண்டோன்
கருவரையின் சந்தனப்பூங் கன்று - குருவிகழ்ந்த 208

வாயை வெருவிவரும் வாசனார் வீற்றிருப்பச்
சாயை தழையா மருக்கொழுந்து - தீயவினை 209

மாறத் தவஞ்செய் மகனாற் பொருஞ்சமருக்
கேறத் தகாத விளந்தோகை - வீறமர்க்குத் 210

தாண்ட விடுவிடையார் தம்மைப்பூ சித்தவரால்
தீண்ட நிறையாச் சிறியபிறை - ஆண்டான் 211

---

204. மாகமதி-விண் நிலவு; பாவித்த-பாவனை செய்த: மதன்-மன்மதன்

205. தீதைஆர்கின்ற சிலை-மன்மதன் விட்ட மலர்அம்பு; ஒப்பு; "வான் கரும்பு வில்லிகணை தெரிந்து மெய்காப்ப." (நள : 1)

206. தனுமலையன்-மேருவை வில்லாக உடைய சிவன்: செற்றார்- அழித்தவர், "விழித்தனன் காமனை வீழ்தர விண்ணில்," (அப்:4:169) பேதை- பேதைப்பருவம் 5 முதல் 7 அகவை வரை என்பர். அஃது உலகியலை அறியாத இளம்பருவமாம்,

207. அமுதின் முளைத்த முளை- அமுதம் கடையும்போது தெரித்த திவலையில் முளைத்த முளை.

208. உபய நடங்கண்டோன்-அகத்தியன்; கருவரை-குடம்; குருவிகழ்ந்த- தேவகுருவாகிய வசிட்டரை இகழ்ந்த.

209. வாசவனார்-இந்திரன்; பேதை மளிரை மருக்கொழுந்திற்கு உவமையாக கூறுதல் இலக்கிய மரபு. "திஙகயினலயாரைச் சேரும் சிவகோசன்' வண்கைப் பகுதா மருக்கொழுந்து" (திருக்காள உலா.)

210. மகன்-காமன்; இளந்தோகை-இளமயில்.

211. விடையார்-இடப வாகனத்தையுடைய இறைவன். சிறிய பிறை- மூன்றாம் பிறை; நுதலுக்கு ஆகி வந்தது.

உகள வடித்தாங் கொருதிருமா லுந்தி
முகுளம் விரியா முளரி - நிகளகிரி 212

ஆடன் மகவா னகத்தினால் மேகமெனக்
கூடல் புகுதாக் குழலினாள் - நீடுகிரி 213

வெள்ளியா ருக்கும் விபுதருக்கும் முண்ணுமடப்
பள்ளியா காதவிரு பார்வையாள் - தெள்ளமுத 214

மூறிக் கலங்கலென வோரெழுத்துக் கோரெழுத்து
மாறிப் பொருள்மயக்கும் வாக்கினாள் - பேறெவரும் 215

காசியில் வேண்டுவதும் கார்க்கமலை வேண்டுவதும்
வீசியிது வென்றுணர்த்தும் வெண்பல்லாள் - ஓசையெழ 216

வம்பு ளடங்கு மதன்புற் புதமுமொரு
கொம்பு ளடங்குமொரு கோங்கரும்பும் - பைம்பாளை 217

நள்ளடங்குஞ் செவ்வி நறுங்குறும்பை யும்பசுந்தாள்
உள்ளடங்கு மம்போ ருகவரும்பும் - வெள்ளைக் 218

கரீரத் தடங்குங் களபமருப் பும்போற்
சரீரத் தடங்கு தனத்தாள் - ஓரிழைதன் 219

---

212. உகள-கடக்க; திருமால் உந்திமுகுளம் விரியாமுளரி-திருமாலின் முகுளம் விரியா உந்தித் தாமரை; முகுளம்-மொட்டு "அலரு முகமுங் குவிகை யுமாதி மலரும் முகுளமும்மான." (குலோ. உலா. 287).

213 நிகளகிரி-பல அடுக்குகளைக் கொண்ட மலை; மேருமலையாம்.

214. விபுதர்-வானோர்; வெள்ளியார்-கைலாயமலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்.

216. காசியில் வேண்டுவது - இறப்பு; கமலை - திருவாரூர்; கமலையில் வேண்டுவது - பிறப்பு; வீசியிது என்றுணர்த்தும் வெண்பல்லாள் - இறப்புப் பிறப்பை நினைவு கூரும் ஆம்பலின் அகவிதழ்களைப் போன்ற பற்களையுடைய வள்; ஆம்பலின் அகவிதழ்கள் நெருங்கியிராமல் இடையிடையே விளங்குவது போலப் பேதையின் விழுந்த பற்கள் இடையிடையே முளையாமல் இருக்கும்; ஒப்பு: "ஆம்பப் பிறந்திருக்கும் மல்லியான்".

217. புற்புதம் - நீர்க்குமிழி; கோங்கரும்பு > கோங்கு + அரும்பு-கோங்கு மலர்மொட்டு.

218. குறும்பை-தென்னங்குறும்பை; அம்போருகஅரும்பு-தாமரைமொட்டு.

219. கரீரம் - யானை; களப மருப்பு - யானைக் கொம்பு.

பேதையின் செயல்கள்

வாதினுமுன் வென்றார் மதுரைவிளை யாட்டெனத்தன்
மீதினுமண் சூடும் விளையாட்டாள் - ஓத 220

மிழைத்தமணற் பாவை யெடுத்தழித்த லோடு
மழைத்தமகன் காணா தழுதாள் - விழித்தெதிரே 221

தாயோர்கண் ணாடி தனைப்பார்ப்பத் தானும்பார்த்
தாயோ விரண்டுண்டென் றாடுவாள்-தீயோ 222

கயத்திற் படுவதெனக் கஞ்சமலர் கண்டு
பயத்திற் படுபயமும் பாராள்-நயக்கிளியும் 223

பூவையும் வண்டலும் பொற்கிண்ண மும்பாலும்
பாவையும் விள்ளாப் பருவத்தாள்-கோவையிதழ் 224

பொய்தல் புகுந்து புதுமணந்தன் பாவைக்குச்
செய்தல் கருதுமொரு செவ்விக்கண்-சைவவிதிக் 225

காயிரம் பொன்னா வடுதுறையி லன்றுபெறச்
சேய்விரும்பிப் பாடுந் திருப்பாட்டாள்-காய்கதிரின் 326

---

220. மண்சூடும் விளையாட்டு - கோட்டு மண் அயர்தல்.

221. மணற்பாவை - மணலால் செய்யப்பட்ட பாவை; "இதுவென்பாவை பாவை" (ஐங். 375); "பாவை அயிர்க்கும் மிருகோட்டு அயிரா பதத்தை" (குலோ. 133); "சிறு பசும் பாவையு மெம்மு முள்ளார்" [குறுந். 278;] "பாவையும் யானும் பண்புளிச் சூடும்" (பெரும். 2. 15 : 112).

222. தாயோர்கள் – ஐவகைத் தாயர்கள். அவர்கள் ஈன்றதாய், ஊட்டுந் தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் முதலியோர். "தாயரைப் பிரியாப் பருவத்துப் பேதை" (விக். சோ. உலா: 116); பார்த்தாயோ - பார்த்தாயா ! என்னும் வியப்புக் குறிப்பு.

223. கஞ்ச மலர் - நீர்த்தாமரை.

224. விள்ளா-பிரியாத; பேதைப் பருவப் பெண் விளையாடுதலில் மிக்க நாட்டமுடையவள் என்பதை; "பூவையும்...... பருவத்தாள்" என்ற அடிகளால் உணர்த்துகிறார். வண்டல்-வண்டல் அயர்தல்; மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று.

225. புதுமணந்தன் பாவைக்குச் செய்தல் கருதுமொரு செவ்விக் கண் (225) என்ற கண்ணியுடன் "வாங்கு மிங்கென் பாவை மணமாலை"(232) என்ற கண்ணியை கொண்டுகூட்டிப் பொருள் முடிக்க.

226. ஆவடுதுறை-திருவாவடுதுறை; சம்பந்தர் தன் தந்தை யாகம் செய்யப் பொற்கிழி பெற்றுத் தந்த வரலாறு சுட்டப்படுகிறது,

மூவர் கணவன் முகமாறி னார்தமையன் 227
தேவர் தமது திறன்மாமன்-பூவகத்தின்

மன்னுமிலந் தைக்கா மருகன்றன் பொற்பதமே 228
உன்னு மடியார்க் குருகுமரன்-தன்னெடுந்தேர்

ஓடிமறு கெங்கு முலாவுந் திருவுலாக் 229
கோடிதிருச் சின்னங் குமுறுதலும்-நாடித்

தழங்கு மகளிரொடுந் தாயரொடு மாயம் 230
வழங்கு மகளிரொடும் வந்தாள்-ஒழுங்கே

கொழுதி யளிகளிக்குங் கோதையீ ரெம்போற் 231
தொழுதி ரெனப்போய்த் தொழுதாள்-குழுமடவீர்

வாங்குமிங்கென் பாவை மணமாலைக் கிப்பெருமான் 232
தாங்குதிரு மாலையெனச் சாற்றினாள்-பூங்கொடியும்

சொன்ன பசுங்குதலைச் சொல்மகிழ்ந்து முல்லைமலர் 233
அன்னநகை யாரும் விளையாடி-முன்னொரு பெண்

கொத்தார்க்கு வேணிக் குடிபுகுதக் காதலித்த 234
தித்தார்க் கெனும்பெருமை யெண்ணாதே-அத்தனார்

தன்னை மணஞ்செயநா தன்கழுத்துஞ் சூடுதற்கு 235
அன்னைதவஞ் செய்த தறியாதே- ...

... ... 236

... ... 237

---

227. முகமாறினார்-ஆறுமுகம்; தமையன்-விநாயகர்.

228. அடியார்க்குருகுமரன் - அடியார்க்கு + உருகும் + அரன் > சிவன்; உன்னும் - நினைக்கும்.

229. குமுறுதல்-முழங்குதல்; திருச்சின்னம்-துந்துபி முதல் முதி ஈராக குறிக்கப்பட்ட கருவிகள். (மே. ப: 150)

230, தழங்கும்-முழங்கும்; தாயர்-ஐவகைத் தாயரை (பார்க்க மே. பா: 222).

231. கொழுதி - கோதி.

233. பசுங்குதலை-பேதையின் மழலைச் சொல்; முல்லையன்ன நகை-முல்லையரும்புகளை ஒத்த பற்களை உடைய பெண்கள்; முன்னொரு பெண்-கங்கை.

234. வேணி - சடைமுடி.

236-237 கண்ணிகள் விடுபட்டுள்ளன.

வள்ளையேய் தாழ்குழையான் வாமத்தா ரேமதமார்
கிள்ளையே யாமெல்லாங் கேட்பதோ-கள்ளவிழும் 238

வாரிந் திரநீல வண்ணனால் வேர்பறித்த
தாரிந் திரபாரி சாதமோ-வீரன் 239

நடைஞெகிழ்ந்த தீமகதந் நாட்கதையான் மொத்தத்
தொடைஞெகிழ்ந்து வீழ்ந்த துழாயோ-புடையமகன் 240

வென்றி விலங்கிடுநாள் வீக்கியவெண் தோளோடும்
கன்றி முகம்புலர்ந்த கஞ்சமோ-கொன்றைநறுஞ் 241

செம்மாலை மற்றுள்ள தேவர் முடிதரித்த
எம்மாலை யும்போ லெளியதோ ந-ம்மாதே 242

ஆன்ற இருபா லரிபிரமர் தங்களையும்
ஏன்ற புயஞ்சுமந்த வேற்றங்காண்-மூன்றுலகும் 243

ஏத்தியசண் டேச னிறைவன் பிறைமவுலி
சாத்தியபின் சாத்துந் தவப்பயன்காண்-பூத்தெரியல் 244

238, வள்ளை - வள்ளைக் கொடி போன்ற பெண்; வாமத்தார் - இடத் தோளில் உள்ள மாலை; ஏமத்தார் கிள்ளை - காவல் பொருந்திய மாலையணிந்த கிள்ளை போன்ற பெண்.

239. வாரிந்திர நீலவண்ணன் - கடல்வண்ணனாகிய கண்ணன்; பாரிசாதம் - தருவின் மரம்; சத்யபாமாவுக்காக பாரிசாதம் கொணர்ந்த வரலாறு சுட்டப்படுகிறது; ஒப்பு : "ஒரு வாணுதல் பண்டுளங் களிக்க உயர்வான் முகடு கிழித் தெழுந்து மருவார் தருவின் மரங்கொணர்ந்த." (தனி, பா.).

240. தீமகம் - தக்கன் யாகம்.

241. கஞ்சம் - தாமரை. வீக்கிய - பருத்த.

243. அரிபிரமர் - திருமால், பிரமன்; ஏன்ற-மேலான; புயம் சுமந்தது - ஊழியிறுதியில் சிவபெருமான் எடுத்த கங்காளத் திருமேனி; "பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்; இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்; கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்." (அப்: 1056).

244, பிறை மவுலி - பிறை மகுடம்; சண்டேசன் - சண்டிகேஸ்வரர்; ஒப்பு: "தா பரத்தைக் கண்டவன் றாதைபாய் வான் காலற வெறியக்கண்டு, தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர்; (நாவுக் : 4 : 469); "தாதை தாளைக் கூர்மழு வொன்றா லோச்சக் குளிர்சடைக் கொன்றை மாலைத் தாமநற் சண்டிக் கீந்தார்." (நாவுக் : 4 : 634).

தையால் பெறநாம் தரமலகா ணென்றுமலர்க்
கையா லணைத்தாற்றுங் காலத்தே-செய்யான் 245

சுதன்பெருந்தேர் பின்தூண்டத் தூண்டினான் சூலா
யுதன்பெருந்தேர் மற்றாங் கொருத்தி-பெதும்பை 246

பெதும்பை

வறிது பயிலாது மாந்தநிரம் பாது
சிறிது களியளிக்குந் தேறல் - விறல்வேள் 247

சரந்தொடுகைக் கொன்றுந் தருண வரும்பு
கரந்தொடுகைக் கொன்றுங் கரும்பு - பெருந்தேவர் 248

சால வருந்தத் தரும்பதமா மல்லவெனக்
கால மதிக்குங் கலாமதியம் - ஞாலத் 249

தணப்ப வெழுத்து தழுவுகொழுங் கொம்பின்
மணப்ப வரும்பருவ வல்லி - கணப்போதில் 250

வேளிட்ட நூல்வழியே மேயநான் கும்புகுப
நாளிட்ட வீடென்ன நன்னெஞ்சாள் - தூளி 251

புகும்விளையாட் டிற்கும் புனல்விளையாட் டிற்குந்
தகும்விளையாட் டுள்ளுந் தரத்தாள் - பகிரதற்கு 252

---

246. சுதன் - மகன். சூலாயுதன் - சிவன்; ''சூலப் படையானை; (அப் 4 : 187), மூவிலை யொருதாட் சூலம் ஏந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே'' (ஒரு பா ஒருபஃது. 6).

247. பெதும்பை-8 முதல் 11 அகவை வரை என்பர், அது உலகியலை ஒரு வாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள நிலையாம்.

247. தேறல்-தெளிவு; விறள்வேள்-மன்மதன்.

248. தருண விரும்பு-இளமையான மொட்டு.

250. பருவ்வல்லி-இளையபூங்கொடி; பெண்ணுக்குச் சிலேடையாக வந்தது; தணப்ப-குளிர.

251, வேளிட்ட நூல்-காம(ன்) நூல்; நான்கும்-அறம் பொருள் இன்பம் வீடு.

252. தூளிபுகும் விளையாட்டு-தெரு விளையாட்டு. புனல் விளையாட்டு-நீர் விளையாட்டு,

மொய்யளகங் கூட்டி முதன்முடித்த வண்ணம்போல்
மையளகங் கூட்டி மலர்முடிப்பாள் - எய்யும்போ 253

ராங்கா னிலைகேட்ப வக்கயிலைக் கேவிசயன்
போங்கா லவன்பகழி போல்விழியாள் - தாங்கியசூல் 254

முட்டிப்பே ரண்ட முகடுதிறந் தாழியம்பு
ளெட்டிப்பார்த் தன்ன விளமுலையாள் - வெட்டும் 255

செறிவாள் விழியார் செயுங்குறிப்பை யெல்லாம்
அறிவாள் செயுமா றறியாள் - பிறர்வாயிற் 256

கேட்ட சுரதவிதம் யார்க்குங் கிளத்தாது
கூட்ட வயதொத்தாற் கூறுவாள் - தீட்டரிய 257

மாதர் குழாஞ்சூழ வந்திந் திரகாந்தச்
சீத மணியரங்கு சென்றேறிக் - கோதில் 258

கிளைத்தாம முத்துங் கெழுமுகமுங் கேழம்
வளைத்தா மரைசிவப்ப வாங்கி - முளைத்தண் 259

பிறையும் பணியும் பிணங்கி மவுலி
உறையுந் திருவிலந்தை யொன்று - மறையும் 260

தனிமைத் தமிழ்விரகன் தன்கண் குளிர
வினிமைத் திருக்கூத் திரண்டும் - துனியின் 261

---

253. பகிரதற்கு...முதல் முடித்த வண்ணம்-பகிரதனுக்காகக் கங்கையைத் தலையில் சூடிய சிவன் ''மன்னிய பகிரதற்கு வெஞ்சின முகங்களாகி'' (அப்: 4:710); ''பகிரதற்குப் பரிந்து முன்னால் . . சுரநதியை வார்சடைமே லேற்று விட.'' (திரு. புரா: 191).

254. விசயன்-அருச்சுனன்; நிலைகேட்ப-பாசுபதாத்திரங் கேட்க; பகழி விழி-அம்பைப்போன்ற விழி.

255. ஆழியம்புள் - சக்கர வாகப் பறவை.

256. செறிவாள் விழி - இணைந்த வால் போன்ற விழி.

257. சுரத விதம் - புணர்ச்சி நிலைகள்; கிளத்தாது - சொல்லாது.

258. சீதமணி அரங்கு - குளிர்ச்சி மிக்க வெண் மணி அரங்கு.

259. தாமமுத்து - முத்துக் கோவை; கெழுமுகம், கேழம் - அணிவகைகள்; முளைத் தண் பிறை - குளிர்ச்சி மிக்க வளர் பிறை.

260. பணி - பாம்பு; மவுலி - மகுடம்; தமிழ் விரகன் - அகத்தியன்.

261. கூத்திரண்டு - கால் மாறி ஆடிய ஆட்டம்.

அழுக்குளத்தி னீங்க வடிபணிந்து வன்னி
முழுக்குளத்தின் கோணங்கள் மூன்றும் - விழுப்பக் 262

கறைநாறும் வேலனரா காரியெரி கண்ட
நறைநாறு தீர்த்தமொரு நான்கும் - இறைமுன் 263

சமைத்த தவத்தின் சரவணவேள் முன்னால்
அமைத்த புறத்தகர மைந்தும் - உமைக்கு 264

நெடிய புதல்வ னிமலன் கமலத்
தடியை வணங்குமுடி யாறும் - படியோ 265

டழியாத வண்ட மழிபோதும் தம்மேற்
கிழியாத பேராழி யேழும் - செழுமான் 266

குமுத மதலை கொடுஇடும் பாட்டின்
அமுதநிறைத் தாடு மளவில் - நமதுபவத் 267

தோமளிக்கு மாறு தொலைத்தகா ளத்திதனிற்
கோமளிக்கும் ஞானப்பூங் கோதைக்கும் - ஏமச் 268

சிமைய மெனுமாடத் தென்காஞ்சி தன்னிற்
சிமைய வறச்சாலைத் தாய்க்கும் - இமையோர் 269

---

262. வன்னி - அக்னி தேவன்; முழுக்குளம் - முழுகும் குளம் > மரூஉ. 260 கண்ணி முதல் 266 கண்ணி வரை எண் அணி இடம் பெறுகிறது.

263. வேலன் - சரவண தீர்த்தம்; அரா - ஆதிசேட தீர்த்தம்; காரி-இந்திர தீர்த்தம்: எரி - அக்கினி தீர்த்தம்; இந் நான்கு தீர்த்தங்கள் இன்றும் உள. நறை நாறு - தேன் கமழும்.

264. சரவணவேள் - முருகன்; புறத்தகரம் - புறத்தில் அமைந்த பிராமணர் குடியிருப்பு.

265. முடியாறு - ஆறுமுகம்; நிமலன்-சித்தன்; கமலத்தடி – தாமரையாகிய அடி.

266. பேராழி - எழுகடல்; "காக்கும் கடல் ஏழும்" (குலோ. உலா : 150) "முழங் கேழ் கடல்." (இரா. உலா: 123).

268. காளத்தி - திருக்காளத்தி; இங்கு எழுந்தருளியுள்ள இறைவியின் திரு நாமம் ஞானப் பூங்கோதை; பவத்தோம்-பிறவிக் குற்றம்; கோமளிக்கும்-இளமை கொழிக்கின்ற.

269. ஏமச் சிமையம் - பொன் போன்ற மலை, மேரு மலையாம்; தென் காஞ்சி - காஞ்சீபுரம்; அறச்சாலைத்தாய்-காஞ்சியில் எழுத்தருளியுள்ள இறைவி காமாட்சியின் திருநாமம்,

தொழுது பெறுமருணைத் தொன்னகரத் தண்ட
முழுதுபெறு முண்ணா முலைக்கும் - மொழிதேவர் 270

பூமிக்கு மன்றிற் புகழ்ந்து துதியெவருங்
காமிக்க நின்றசிவ காமிக்கும் - நேமிக்குள் 271

மல்குகம லாலயத்தில் வந்தெவரும் கேட்டவரம்
நல்குகம லாலய நாயகிக்கும் - புல்குகுழல் 272

அஞ்சினு மொய்த்த வனமுலையாங் கீழ்வேளூர்ப்
பஞ்சினு மெல்லடுக்கும் பாகனார் - கஞ்சக் 273

கருவி யுடனைங் கருவி துவைப்ப
வெருவி வினையனைத்தும் வீயத் - தெருவில் 274

வரலுங் கழங்கும் வளைமுழங்குங் கையும்
விரலும் பொறையாற விட்டாள் - முரலுஞ் 275

சுரும்பும் பசுங்கிளியும் சூழ்குழலும் யாழும்
கரும்புந் தருஞ்சொற் கணத்தார் - விரும்பி 276

எழலு மெழுந்துமறு கேகலு மேகித்
தொழலுந் தொழுது தொடர்ந்தாள் - அழகொழுகு 277

270, அருணை-திருவண்ணாமலை; இமையோர்-தேவர்கள்; உண்ணாமுலை: திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவின் திருநாமம்,

271. காண்பிக்க> காமிக்கவாயிற்று; நேமி - உலகம்; சிவகாமி-சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள இறைவி.

272. கமலாலயம்-திருவாரூர்; கமலாலயநாயகி-தேவியின் திருப்பெயர்; ''கமலா லயநா யகிபாதங் கடிமா மலர்தூய் நினைவாமே'; (திரு. புரா;6) ''கீழ்பால் மானனைய நோக்கிகம லாலயநா யகிவரமார் கோயில்'' (திரு புரா: 267.)

273. வனமுலை - கீழ்வேளூரில் எழுந்தருளியுள்ள வனமுலைநாயகி அம்மன்; புல்குழல் அஞ்சி-ஐந்து தொகுதியாக வழங்கப்பட்ட கூந்தல்; ''ஐம்பால் படுத்த வளர் கருங்கூந்தல்'' (விக். உலா : 174) ''ஐம்பால்'' (பு. வெ. 223)கஞ்சக் கருவி-கைத்தாளம்.

274. ஐங்கருவி - பஞ்ச வாத்தியம். துவைப்ப - ஒலிக்க.

275. முரலுஞ் சுரும்பு - ஒலிக்கும் வண்டு.

276. சுரும்பு, கிளி, குழல், யாழ் முதலியவற்றின் குரல் மகளிரின் குரலுக்கு உவமையாக வந்தது.

மெய்யும் திருநீறும் வெள்ளமுடி யும்மழுவும்
கையும் திருத்தோளுங் கண்ணுற்றாள் - ஐயன்மீர் 278

யார்க்கும் விழிகளிரண் டன்றோ வதிகமிக
ரேர்த்த நுதற்க ணெதற்கென்றாள் - தார்க்குழலாய் 279

இப்பே ரழற்க ணிறைவர் படைத்திலரேல்
முப்பே ருலகமிருள் மூடாதோ - எப்பாரு 280

மெங்கும் சமய மெவையும் தவிர்த்தவமே
பொங்குமுல காயதமாய்ப் போகாதோ - செங்காந்தள் 281

அங்கரும்பை வெற்பை யரவை யரியம்பை
வெங்கரும்பு வண்டுமலர் வெல்லாதோ - சங்கரர்க்கு 282

மோரா யிரங்க ணொருநான் முகம்பெற்ற
பேரா யிழிவு பிறவாதோ - கார்வண்டு 283

உழுந்தாரைச் சூடு மொருத்திசுட லைக்கே
விழுந்தாரைப் போலாய் விடாதோ - கொழுந்தழலாம் 284

இக்கண் பொருதபயத் தின்னந் தவமுனிவர்
அக்கண் பொருதுவே ளஞ்சுங்காண் - இக்கண் 285

நெடுங்க ணிரதி நிறைத்த திருத்தாலி
இடுங்கண் பறித்த வியமன் - தடங்கண்ணாய் 286

---

278. திருநீறு-விபூதி; வெள்ள முடி-கங்கையை அணிந்த சடை; ''பாசமும் அங்கது கழியப் பண்ணும் திருவெண்ணீரும்'' (கோ. புரா); மழு - வலது கையில் ஏந்திய மழு.

279. ஏர்த்த நுதற்கண் - கவின் மிக்க நெற்றிக் கண், ஞான சக்தியை விளக்குவது, தீயாகிய ஒளியை உடையது. ''கண்ணுதலும் கறைமிடறும் காதலத்தின் மறிமழுவும்'' (திரு. புரா : 163); ''கண்ணுதலான் வெண்ணீற்றான்'' (திரு. புரா: 661)

280. அழற் கண் - அக்கினியாகிய கண்.

281. உலகாயதம் - இறைவன் இல்லை என்று கூறுவோர்.

282. சங்கரர்-சிவபெருமான்.

283, நான் முகன் - பிரமன்.

284. உழுந்தார் - மொய்க்கின்ற மாலை; கொழுந்தழல்-மதர்த்த நெருப்பு.

285. வேள் - மன்மதன்.

286. இரதி - மன்மதனின் மனைவி.

காம தகனனென்றுங் கண்ணுதலோ னென்றுமவர்க்
கேம முதுநாம மிட்டதுகாண் - ... 287

... ...
... ... வாரி 288

வழியு முலகில் வயங்கொளிகட் கெல்லா
மொழியு மிதுவே முதல்காண் - தொழுதிறைஞ்சாய் 289

மானே யென்றந்த மடவா ரெடுத்தியம்பத்
தானே சற்றன்பு தலைப்பட்டாள் - வானத் 290

தருணோ தயப்பதும மாடிமுடி நாடித்
தருணோ தயப்பூந் தவளம் - பரிமளிப்ப 291

தென்னச் சிறிதே யிதயங் களிவிளைத்தாள்
வன்னப் பசப்பூர நின்றாள் - அன்னையரும் 292

கண்டிப் பருவக் கடையடைந்தா ளென்றிவளை
அண்டித் திறம்வாழ்த்து மவ்வளவிற் - பண்டுசினம். 293

செய்கால காலருந்தந் தேரும் தெருக்கடந்தா
ரெய்காலம் போதா திவளன்றோ - மெய்காய்ந்த 294

நெற்றித் தழற்கண் ணிலைகேட்ட பெண்மீது
வெற்றிச் சரங்கள்விட வேறுண்டோ - மற்றெதுவோ 295

துங்க விசிகந் தொடுத்த தொடைமடக்கி
வெங்கண் மதனகன்றான் வேறொருத்தி - மங்கை 296

---

287. கண்ணுதலோன் - நெற்றிக் கண்ணை உடைய இறைவன். "கண்ணுதலான் வெண்ணீற்றான்." (திரு. புரா. 661). காமதகனன் - காமனை எறித்தவன்., 'மாரனுக் காதிக்கமிட்ட நெற்றிக்கண்.' (குற். உலா. 188).

289. வயங்கொளி - வீசுகின்ற ஒளி. ஒழி - முடிவு. மொழியுமிதுவே முதல் காண் - முடிவாகவும், முதலாகவும் விளங்குபவன்.

290. மடவார் - பெண்டிர். அருணோதயம் – வைகறை நேரம். பதுமம் - குளம்.

291. பூந்தவளம் - வெண்தாமரை. இங்குப் பெண்ணுக்குச் சிலேடையாக வந்தது.

292. களி விளைத்தாள். மகிழ்ந்தாள். வன்னம் - நிறம்.

296. மங்கைப் பருவம் : 12 அகவை முதல் 13 அகவை வரை என்பர். அது காம நுகர்ச்சிக்கு ஏற்புடைய பருவமாம். துங்க விசிகம் - பெருமை மிக்க அம்பு; மதன் - மன்மதன்; தொடை-அம்பு.

மங்கை

செருகப் பதம்போந்த செவ்வந்தி மாலை
பருகப் பதம்போந்த பாகு - பொருமதனைக் 297

கூவப் பயின்ற குயிற்பே டிரலையொடு
தாவப் பயின்ற தருணமான் - காவியிதழ்க் 298

கொத்துறவின் வண்டும் கொழுஞ்சாந்தும் பூந்தாரும்
புத்துறவு செய்யும் புரிகுழலாள் - முத்துநகை 299

வன்னிப்போர் செய்தார் மழவிடையிற் தாடகையைக்
கன்னிப்போர் செய்தகணைக் கண்ணிணையாள்-செந்நிறத்து 300

முந்து மிளங்கோ முதலீற்றுத் தீம்பால்போல்
வந்து மதுரித்த வார்த்தையாள் - சந்திற்குப் 301

பைத்தும் பகன்றாம் பதம்போய்ப் பதம்பாகர்
வைத்த கரிநிகரு மாமுலையாள் - நித்திலப்பூண் 302

பூண்வகையு மின்பம் புணர்வகையு மாடவரைக்
காண்வகையுங் கற்ற கலைவல்லாள் - பூணும் 303

வடக்குங் குமமுலையார் மால்விளம்பா துள்ளத்
தடக்குங் குறிப்பு மறிவாள் - சுடர்க்கடகக் 304

---

297. பதம் போந்த பாகு - முருகிய வெல்லப் பாகு; பருக - உண்ண; பொருமதன் - போர்செய் மன்மதன். கூவப் பயின்ற குயில் - காமநுகர்ச்சிக்கு அழைக்கப் பயின்ற பெண் குயில். இரலை - கலைமான்.

298. தருணமான் - இளமான். காவியிதழ் - கருங்குவளை இதழ்.

299. பூந்தார் - பூமாலை. புத்துறவு - புதுமையாகப் பொருத்த. புரிகுழலாள் - சுருண்ட கூந்தலையுடையவள்.

300. தாடகை - தடாதகை. தடாதகை என்ற பாண்டி நாட்டு அரசி நால் வகைச் சேனையுடன் சிவபெருமானை எதிர்த்த வரலாறு சுட்டப்படுகிறது. இவ் வரலாற்றைத் திருவிளையாடல் புராணம் 'தடாதகைப் பிராட்டியின் திருமணப் படலத்தில்' காணலாம்.

301. இளங்கோ - இளம் பசு. முதலீற்றுத் தீம்பால் – முதல் கன்று ஈன்ற பசுவின் இனிய பால். மதுரித்த – இனித்த.

302. கரி நிகரும் - யானைத் தந்தத்தை ஒத்த. நித்திலப் பூண் - முத்து மாலை.

புணர் வகை - புணர்ச்சி நிலைகள்.

304. வடம் - கழுத்தணி. குங்குமமுலை - நகிலுக்குச் சிவந்த நிறமுடைய சந்தனத்தைப் பூசுதல் மரபு. "குங்குமச் சங்கை கமழும் தடந்தோள்." (ராச உலா. 350). மால் - வேட்கை.

கைக்கா ரிகையாருந் தானுங் கலந்தேகி
மைக்கா ருறங்கு மலர்க்காவிற் - புக்குத் 305

தெருவி லொருநாட் சிவன்வரக் கண்ட
பரிவிலொரு தூதுவிடப் பார்ப்பாள் - திருநுதலின் 306

மூரித் தழற்கண் முளிந்தமையால் விற்கரும்பின்
நாரிச் சுரும்பே நடவாயே - பேரிமய 307

வாச மகள்கரத்தில் வைகலாற் பைங்கிள்ளாய்
ஈசர் மருங்கெனக்கே யேகாயே - வாசவனாம் 308

யாகக் குயிலை யிறகரிந்தார் தன்மருங்கிற்
போகக் குயிலே பொருந்தாயே - வேகத்தால் 309

உன்ன தொருதலைவ னோர்தலையைக் கொய்தார்முன்
அன்ன வரசே யணுகாயே - யென்னிடரைப் 310

பூமயில்சே ரம்பும் பொருசிலையு முள்ளார்முன்
மாமயிலே நீபுகல வல்லாயே - போம்வழியி 311

னீசரன்ன கைகாப் பிருங்கருடற் கும்முனக்கும்
கூசரத்திற் காயக் கொதியாதே - பேசினாதே 312

னாமொருபுள் ளன்றோ நமக்கிரங்கா ரென்னாதே
காமர் கழுக்குன்றிற் கண்டாயே - மாமதுரை 313

305, மைக் கார் - கரு மேகம்.

307. மூரி - பெருமை. நாரிச்சுரும்பு - மன்மதனின் வில் நாணாகிய வண்டு. ''சிலை பிடித்து நாணெறிந்து செல்ல'' (குலோ. உலா: 380); ''வண்டு நாண் தென்றல் தேர்.'' [இராச. உலா. 304].

308. பேரிமய வாச மகள் - மலைமகள்.

வாசவன் - இந்திரன். வைகல் - தங்குதல்.

309. யாகக் குயில் - இந்திரன் வேள்வி செய்ய மயங்காதவன், ஆதலான் யாகக்குயில் என்றார்.

310. ஒரு தலை கொய்தது - சிவன் பிரம்மனின் ஐந்தாம் தலையைக் கொய்த வரலாறு சுட்டப்படுகிறது அன்னஅரசன் - நான்முகன்; ''ஊடு அனையும் அன்னத்தேர் ஏறி''. (திருப் பூ. உலா: 75).

311. பொரு சிலையுமுள்ளோர் - மன்மதன்.

313. கழுக்குன்று - திருக்கழுக்குன்றம்.

மாமதுரை - கூடல் நகர்.

மன்றிரங்கும் கூத்தர் வலியனுக்கு நாரைக்கு
மன்றிரங்கு பேறு மறிவாயே - குன்றவில்லி 314

வாமத் திலந்தை வனமா தவஞ்செய்தார்
காமத்தூ தின்னமெனக் காணாதே - தீமைபுரி 315

வேதனையும் கங்குல்விடு வித்த தனக்கிறைவன்
கேதம்வாழ் வித்தகதை கேட்டாயே - தூதுபோய் 316

முன்னூண் விடமானார் முன்பன்று காய்சினத்தி
னுன்னூளுக் கூனிரண்டு மோட்டாயே - பன்னாளும் 317

நீதூற்று வாயரவ நீக்குவா யிப்போதென்
தாய்தூற்று வாயரவந் தள்ளாதே - தூய்தாக 318

வின்னே பெருமா னிதழியந்தார் தாராயென்
மன்னே யெனத்தொழுது வாழ்த்துதலும் - பொன்னே 319

கடுத்த கடுக்கை கடிகமழ் கங்கை
யடுத்த திருச்சடிலத் தானை - விடக்கனலி 320

யீட்டரவத் தாழி யெழுதேவர் காவென்னக்
காட்டரவங் கேட்டிரங்கும் காதானை - மூட்டமரின் 321

---

314. வலியன் - கரிக்குருவி. அன்றிரங்கு பேறு - முக்தி அளித்தது. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலத்தில் இவ்வரலாறு சுட்டப்படுகிறது. முற்பிறப்பில் சிறிது பாவம் செய்த ஒருவன் கரிக்குருவியாகப் பிறந்தான். பலநாட்கள் காட்டில் ஒடுங்கி வாழ்ந்த அந்தக் குருவி, மதுரை சென்று நீராடி இறைவனை வணங்க வலிமை பெற்றது, பறவைகளுக்கெல்லாம் வலியனவாய் விளங்குமாறு 'வலியன்' என்னும் பெயர் பெற்று விளங்கியது.

நாரைக்கும் அன்றிரங்கியது:- திருவிளையாடல் புராணத்தில் நாரைக்கு முத்தி கொடுத்த படலத்தில் விளக்கமாகக் காணலாம். ஓதிய திருவிளையாடல் புராணத்தை கேட்ட நாரை, தாமும் இறைவன் பதம் சேர மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி 15 நாட்கள் தவம் இயற்றியது. நாரையின் திறன் கண்ட இறைவன், அதன் வேண்டுகோட்படிச் சிவபதவி அளித்தார். ஒப்பு; நாரை யன்று சென்ற சிவலோகத்தே இன்றெனையங் கெய்த விடலாகாதோ." (தமிழ் விடு: 261)

316. கங்குல்-இருள்.

318. வாயரவம் வாயவரம்-பழிச்சொல்.

319. இதழியந்தர்-கொன்றைமாலை; மன்னே-எப்பொருளுக்கும் இறைவன்

320. கடுக்கை-கொன்றை; திருச்சடிலம்-சடைமுடி; விடக்கனலி-தீயாகிய விடம்,

321, காட்டரவம் கேட்டிரங்கும் காது-அச்வதரர், கம்மளர் என்னும் நாக அரசர்களைக் குண்டலங்களாக உடைய காதன்; மூட்டமர்-மூண்ட+அமர்.

வீர வவுணர் வியனகரி மூன்றெரிய
மூரன் முகிழ்த்த முகத்தானை - யோரிரண்டு 322

பாடகத்தா ளம்மை பதினா லுலகத்தாள்
சூடகத்தா ளூறுபடுந் தோளானைக் - கூடலரைத் 323

தாயதொரு சூலத்தாற் றாங்குமிரு புள்ளார்தங்
காயமிரண் டேந்துதிருக் கையானைப்-பாயலார் 324

மேலையரிக் கொம்பும் விறலாமை யுந்தலையின்
மாலையுங்கூத் தாடுநெடு மார்பானை - வேலையாற் 325

காப்புடைய வண்ட கடாகமுடிக் கச்சினான்
யாப்புடைய செம்பொ னிடையானைப்-பாப்பமளி 326

மண்ணிடந்து தேடு வராகமொரு தாமரைச்செங்
கண்ணிடந்து சாத்துமலர்க் காலானை-வெண்ணிலாத் 327

தெள்ளுந் தெருவில் திசையுமிசை யுந்தடவிக்
கொள்ளுங் கொடித்தேர் கொடுவரலும்-வள்ள 328

322; அவுணர்-அரக்கர்; வியநகர்மூன்று-திரிபுரம்; மூரல்-புன்முறுவல்.

323. பாடகம்-பாதஅணி; பதினாலுலகத்தாள்-பதினான்கு உலகங்களுக்கும் அரசி. உலகம் பதினான்கு அவை: பூ, புவம், சுவர்க்கம், மா, தவம், பிரமம், சிவலோகம், அதலம், விதலம், சுதலம், நிதலம், தராதலம், ஏசாதலம், பாதாலம். என்பன. கூடலர்-பகைவர்.

324. புள்ளார் - அன்னப் புள்ளார். பிரமன்; கருடப்புள்ளார், திருமால், பிரமன் திருமால் இருவரையும் ஊழிக் காலத்தில் தோள்களில் சுமந்த கங்காளத் திருமேனியன். ''ஆன்ற இருபா லரிபிரமர் தங்களையும் ஏன்ற புயஞ்சுமந்த வேற்றங்காண்.'' (மே. பரி; 243); ''பிரமன்...களேபரமும் கருங்கடல் வண்ணன் களேபரமும் கொண்டு கங்காளராய்'', (அப்: 1056). பாயலார்-பாம்பைப் படுக்கையாக உடையவர்,

325, மேலையரிக் கொம்பு - திருமாலின் கொம்பு.

326. அண்டகடாகம் - அண்டகோளம், யாப்புடைய - கட்டுடைய. பாம்பமளி - பாம்பைப் பாயலாக உடைய திருமால். மண்ணிடந்து தேடு வராகம் - பூமியைக் குடைந்து தேடிய வராக மூர்த்தி.

327, கண்ணிடந்து சாத்து மலர்க்காலான் - திருமால், திருமால் தன் மலர் விழி யொன்றைப் பிடுங்கிச் சிவபெருமான் திருவடியில் இட்டு வணங்கிய வரலாறு சுட்டப்படுகிறது. ஒப்பு: ''மீதெலாம் தேடினவன் மெய்த்தவத்தால் கண்டொரு நாள் காதாலே வைத்திரு கண் சாத்தும்.'' (குற். உலா; 287).

8350

முலையாள் மயலொழிந்து மொய்யிலந்தை சூழ்ந்த
மலையா ளுடையார்முன் வந்தாள்-தலைவணங்கி 329

வேணியு முக்கண்ணும் வெண்முறுவற் செம்முகமும்
பாணியும் மானும் பதச்சிலம்பும்-மாணிக்க 330

மேனியும் கண்ணால் விழுங்கித் துகில்வழங்கு
மானியுங் கண்தான் மயலானாள்-மானிதயக் 331

காதலை யீந்திலந்தைக் கானத்தார் தேரூர்ந்து
போதலை மேவினார் போயினார்-மாதிவளும் 332

மங்கை குறையிரத்தல்

வீசித் திரியூழி வெள்ளமுங் கொள்ளாத
மாசித்ர கூட மலையாரே-யீசரே 333

அக்கரே வெண்ணீற் றழகறே யானந்த
நக்கரே கேடில்லா நாதரே-மெய்க்கனியா 334

மிவ்வார வானைக்கா வென்னுமூர் நீர்பூண்ட
வவ்வாரம் போலென் றகன்றீரோ-செவ்வானிற் 335

கார்போன் மிடற்றீரென் கண்ணீரு நீர்முடித்த
நீர்போற் சிறிதாய் நினைத்தீரோ-கூர்புகையின் 336

வெண்பிறையாங் கூற்றுவனை வேணிக்கு நீரணிந்த
தண்பிறைபோ லெண்ணித் தரித்தீரோ - ... 337

---

329. மலையாள் - பார்வதி.

330. வேணி - சடைமுடி. ''பாணியினும், வேணியினும் வைத்த முடியிரண்டு.'' (குற். உலா: 269). பாணி - கை.

331. விழுங்கி-பருகி: மானி பெண். மானிதயம்-மான் + இதயம்.

333. மாசித்ர கூட மலையாரே-சித்திர கூட மலையில் எழுந்தருளியுள்ள இறைவன்.

334. அக்கர்-அக்க மாலையணிந்த இறைவன்; நக்கர்-நக்கன்; கேடில்லா நாதர்-கேடிலியப்பர்; கீழ்வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவன்.

335. ஆனைக்கா-திருவானைக்கா; அவ்வாரம்-விரும்பப்படும் அம்மாலை.

336. கார்போன்மிடறு-மேகம் போன்ற கருமையான மிடறு: நீர்-கங்கை

337. வேணி-சடை; கூர்புகை-மேகம்; வெண்பிறை-மின்னல், மின்னலுக்கு பகைவன் அரவம்; தண்பிறை-குளிர்ச்சி பொருந்திய நிலவு.

... ... 338

... ...

... ... ஆராயின் 339

கானாயர் வேயுமிரு காதுக் குணத்தூது
மானாயர் வேய்போ லறிந்தீரோ-மேனிசுடர் 340

செய்களபங் கூடற் றிருமூர்த்தி யாரறைத்துப்
பெய்களபம் போன்மதித்துப் போந்தீரோ-மையலால் 341

ஆற்றே னெனுமா றறியாதே யஞ்சிநெஞ்சு
தேற்றே னெனுமாற்றந் தேறாதே-கூற்றுதைத்தீர் 342

என்பால் இரக்கமில்லா தேகின்றீ ரென்றுதொடர்ந்
தன்பா லழியா தழுங்குதலும் தன்பாணி 343

வில்லு நுதலுங் குனியமத வேள்முனியச்
சொல்லு மடநாணுந் தோள்வளையும்-எல்லாம் 344

நடன்கொடுபோ கத்தாயர் நங்கையைத்தங் கூட்டத்
துடன்கொடுபோ னார்மற் றொருத்தி-மடந்தை 345

மடந்தை

வருமளிகட் கல்லான் மதனுக்குங் காதம்
பரிமளிக்குங் கோமளப்பூம் பாவை-யெரிவிழிக்குக் 346

---

340. காதுக்குண - காதை வருத்த. வேய் - மூங்கில்.

341. கூடல் - மதுரை. மூர்த்தி-மூர்த்தி நாயனார். இவர் மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோம சுந்தரக் கடவுளுக்குத் திருக்காப்புச் சாத்தச் சந்தனக் கட்டை இல்லாததால் தன் முழங்கையை அறைந்துப் பெய் குருதியைச் சந்தனமாகப் பூசினார் என்பது வரலாறு. மையல் - மோக மயக்கம்.

342. கூற்றுதைத்தீர் - திருக் கடவூரில் எமனை உதைத்தீர்.

343. அழுங்குதல் - வருந்துதல்.

344. மதவேள் - மன்மதன். முனிய - கோபிக்க, குனிய - வளைய. நடன்-நடராஜர்.

345. மடந்தை: மடந்தைப் பருவம் 14 அகவை முதல் 19 அகவை வரையாம். இஃது காம நுகர்ச்சியில் பயின்ற பருவம்.

346. காதம் - பத்து மைல். கோமளப்பூ - இளமை பொருந்திய பூ.

கூசுமதக் கடவுள் கோயிற் கிரதியிடும்
வீசுமணி விளக்காம் மெய்த்தோகை-தேசிகனை 347

யெள்ளும் பெரும்பாவ மேகினான் வாகனமாய்க்
கொள்ளும் படிமுடித்த கூந்தலாள் - புள்வரைதன் 348

மெய்பார்க்க வேளூரின் மெய்த்தவஞ்செய் தோன்பதுமக்
கைபார்க்கப் பார்க்குமிரு கண்ணினாள் - துய்யோர் 349

தவலை யொழிப்பார் தமக்குநிழ லீந்த
துவலை யெனும்குதலைச் சொல்லாள் - நுவல்வணிகற் 350

கீந்த தெனநமக்கு மீய நிதியிரண்டும்
போந்த தெனுமுகத்தாள் பொற்கழுத்தாள்-பாந்தள்போல் 351

நான்ற சடையார் நடமிரண்டுங் கண்டோனை
யீன்ற பொருளா மிளமுலையாள் - ஆன்றபிரான் 352

காலையஞ்செய் செங்கண்ணா னந்தப் பிறப்பிழைத்தே
நூலையஞ்சு விக்கு நுசுப்பினாள் - மேலொருநாள் 353

தோற்று நரகனுயிர் சூழ்கொலைதீர்த் தோனமளி
யாற்றும் வயிற்றினா ளல்குலாள் - ஏற்றோன் 354

மதுர மொழிமறுத்து வந்துபூ சித்தோ
ரெதிர வெருளு மியலாள் - கதிர்மறுகிற் 355

---

347. இரதி - மன்மதனின் துணைவி. தேசிகன் - வசிட்டர்.

348. வாகனம்-இந்திரன் வாகனம் மேகம்.

349. வேளூர்-புள்ளிருக்கு வேளூர்; வைத்தீசுவரன் கோயில்.

350. தவல்-துன்பம்; துவலை-திவலை; குதலைச் சொல்லாள்-மழலைச் சொல்லையுடைவள்; நுவல் வணிகன்-தருமபுரவணிகன் சந்திரகுப்தன்.

351. நிதி இரண்டு-சங்கநிதி, பதுமநிதி; பாந்தள்-பாம்பு.

352. நான்றசடை-தொங்கிய சடை; நடமிரண்டும் கண்டோன்-கால் மாறி ஆடிய ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்த அகத்தியன்; ஈன்ற பொருள்-கும்பம்.

353. நூலை அஞ்சுவிக்கு நுசப்பு-நூலைவிட மெல்லிய இடை.

354. நரகனுயிர் சூழ்கொலை-நரகாசூரனைக் கொன்ற பாவம். அமளி-திருமால் படுக்கையாகிய பாம்பு, இங்கு முரகரன் பூசித்த வரலாறு சுட்டப்படுகிறது. ஏற்றோன்-எருதை வாகனமாக உடைய சிவன். "ஏறேற்ற மாவேறி யெண்கணமும் பின்படர" (நாவுக்:14:190)

பாங்கியும் தானும் பதஞ்செய்த சுண்ணத்தை
வாங்கி யிறைக்கும் வசந்தத்துத் - தாங்க 356

ளொருவர்க் கொருவ ருயர்ந்த தெனதென்று
இருவர்க்கு மாறுபிறந் திவ்வூர்த் - தெரிவையர்முன் 357

வென்றார்க்குத் தோற்றார் விடுதூது செல்கவென
நின்றார்தம் காரளிக்கு நேரளிப்பச் - சென்றாங்கு 358

மான்சுண்ண முண்டு மதுகரமெல் லாமிருளைத்
தேன்சுண்ண முண்ணாது சிந்துதலும் - தான்செறிந்து 359

தோற்றனையே தோழிநீ தூதுபோய்க் கீழ்வேளூர்
ஏற்றனையே கூட்டிங் கெனக்கென்றாள் - தோற்ற 360

நறையோதிக் காதலியும் நம்தூதா லிந்த
விறையோன் வருமா றெதுவோ - கறையரவ 361

மாடுந் திருச்செவிக்கீ ழுஞ்சாது தூதோதக்
கூடுந் துணிவெம்மாற் கூடுமோ - சூடுதுழா 362

யேறுபுறங் கண்டாரை யீரத் தலையிருப்பாள்
வேறுபுறம் போக விடுவாளோ - சீறுகிரி 363

வில்லி யயலாரை மேய விடுத்திமய
வல்லி பிரிந்தாற்ற வல்லளோ - அல்லதெனின் 364

---

356. கதிர் மறுகில்-சூரிய ஒளியில்; பதம் செய்த-பக்குவம் செய்த.

357. தெரியவையர் - 25 முதல் 35 அகவை வரையுள்ள பெண்கள்.

359. மான் சுண்ணம் - மான் சுண்ணப் பொடி; இருளை - கூட்டம்; மது கரம் - வண்டு.

360. கீழ்வேளூர் ஏற்றனை - கீழ்வேளூரில் எழுந்தருளியிருக்கும் கேடிலி யப்பரை.

361. நறையோதி - தேன் மணக்கும் கூந்தல், நறும்புகையூட்டப்பட்ட கூந்தலுமாம்; இறையோன் - இறைவன். கறையரவம் - விடமுடைய நாகம்.

362. சூடு துழா யேறு - திருமாலாகிய இடபம்.

363. புறங்கண்டார்-வாகனமாகக் கொண்டவர். திருமால் இடபமாகிச் சிவ பிரான் வாகனமாகவும், கொடியாகவும் உள்ளார் என்பது புராண வரலாறு. ஒப்: ''ஈராழி காண விலகொளிசேர் சங்கமுடன் ஓராழியேந்து முயர்கொடி'' (குற். உலா 470). ஈரத்தலையிருப்பாள்-சிவபெருமானின் தலையில் குடியிருக்கும் கங்கை; சீறுகிரி - சீற்றமிக்க மலை; மேரு மலையாம்; வில்லி - சிவபெருமான்; இமயவல்லி-உமாதேவி,

மாயோ னிளையாள் மலரடிக்கீழ்ச் சேடியர்நாம்
போயோதிற் சீற்றம் பொறுப்பளோ-பேயோடு 365

பூத கணம்பிணங்கப் பொங்குமவர் சந்நிதியின்
மாத ரணுக வசமாமோ-ஏதுசெய்கேன் 366

என்றிப் படிநினைக்கு மெல்லை யிலந்தைவனந்
துன்றிப் புவனந் தொழநின்றோன்-வென்றி 367

உமையவள் கண்டத் தொருதிருநாண் பூட்டி
இமையவர் வாழ்த்த விருந்தோன்-நமைசூல் 368

விளையுதரத் தூடு விரவாது தான்போய்க்
கிளையுதரத் தூடு கிடந்தோன்-இளைமா 369

வடுமறுகு கட்பரவை வாசல்வா யாரூர்
நடுமறுகு தேய நடந்தோன்-கடுகு 370

மாகளமோர் கோடி மழைதிரண்ட தாம்பவனிக்
காகளமோர் கோடி கறங்குதலும்-ஓகையெழக் 371

கன்னியுந் தோழி கலைத்தலையை யீர்த்தோடித்
துன்னிய வாயும் தொழத்தொழுதாள்-மின்னும் 372

தவளக் குறுமுறுவல் தாமரையைக் கண்டாள்
பவளத் திருவுருவம் பார்த்தாள்-குவளை 373

---

365. மாயோன் இளையாள்-திருமாலின் சகோதரி, உமையம்மை, சேடியர்-தோழியர்.

366. பூத கணம் - ஐம்பூதகணங்கள்; "பூதங்கள் பலவும் வைத்தார்", (நாவுக்:382); "பூதத்தின் படையர்" (நாவுக்:619). வசம் - கீழ்படிதல்.

367. துன்றி - நிறைய

368. கண்டம் - கழுத்து. திருநாண் - தாலி. இமையவர் - தேவர்.

370. பரவை - சுந்தரரின் மனைவி. ஆரூரர் - திருவாரூர். சுந்தரருக்காகப் பரவையின் வாசலுக்கு இறைவன் தூது சென்ற வரலாறு திருத்தொண்டர் புராணத்தில் காணலாம்.

371. காகளம் - எக்காளம்

372. துன்னிய ஆய் - நெருங்கிய தாய்

373. தவளக் குறுமுறுவல் - இளவெண் நகை. தாமரை - தாமரையாகிய வாய்.

களிகொள்ள வுள்ளங் களித்தா ளவன்தோள்
ஒளிகொள்ள நாண மொளித்தாள்-கிளிமொழியை 374

நோக்கார்மற் றொன்று நுவலார் இலந்தைவனத்
தூக்கார் திருத்தேரைத் தூண்டினார்-மாக்கோதை 375

தோழியை யொட்டியவாய்ச் சொல்லலையோ வென்றலைப்ப
வாழிய மைக்கண் ணவளும்போய்-வேழம் 376

உரித்தாரே சிந்தி னொருமுதுகுத் தண்டந்
தரித்தாரே கேடில்லா தாரே-நிருத்தத்தின் 377

உத்தமரே நீர்மின் னுலாவும் சடையரே
அத்தரே மெய்யடிமைக் காவலரே - இத்தெருவில் 378

கூறும் பழிக்கஞ்சீர் கூடற் பழிக்கஞ்சிப்
பேரு முமக்கோ பிறர்க்கேயோ-சீரடிமை 379

ஆய்க்கனியும் காரைக்கால லம்மை கனியிலவர்
வாய்க்கனியும் வேட்டொருக்கால் வாரீரோ-தூய்க்கடலில் 380

ஒண்மீன் விரும்பினீ ரோபரதன் பாலிவள்பால்
கண்மீன் விரும்பினாற் கைப்பாமோ-பெண்மயிலிற் 381

---

374. களிகொள்ள - மகிழ்ச்சி கொள்ள. ஒளித்தாள் - மனதிலடக்கிக் கொண்டாள்.

375. ஊக்கார் - உயர்ச்சி மிக்கவர்.

377. வேழம் உரித்தார் - தாருகாவனத்து முனிவர்கள் அனுப்பிய யானையைக் கொன்று தோலை உரித்தார். கேடில்லாதார் - கேடிலியப்பர்.

378. நிருத்தத்தின் உத்தமரே - நாட்டியத்தில் மேன்மையானவர். நீர் மின்னுலாவும் சடையர் - கங்கையைச் சடையில் அணிந்தவர். மெய்யடிமைக் காவலர் - உண்மையான அடியார்களுக்குக் காவலர்.

379. கூடற்பழி - மதுரை நகரில் குறித்த பழி. திருவிளையாடல் புராணம் ''பழிக்கஞ்சிய படலத்தை''ப் பார்க்க. ஒப்பு: ''பழிக்கஞ்சி என்றுலகில் மேவும் பெயர்'' (தமிழ். தூது: 254).

380. வாய்கனி - வாய்ச் சொல்.

காரைக்காலம்மை - சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டவரும், சிவதாண்டவத்தைச் சேவடிக் கீழ் அமர்ந்து பாடும் வரம் பெற்றவருமான காரைக்காலம்மையின் வரலாற்றைப் பெரிய புராணத்தில் காணலாம்.

381. பரதன் பால் - மீனவன் மீது. ''திருவிளையாடல் புராணம், வலை வீசின படலத்தில், இவ்வரலாற்றைக் காணலாம். ஒண்மீன் - ஒளிமிக்க மீன், பரதராச மகளாகிய உமாதேவி.

ஆணிப் பசுங்கனக வாடைத் துமயுமது
பாணித் துடியளவும் பற்றாதோ - வாணன் 382

முழாக்குடத்தில் நண்பானீர் முன்னுமிவள் கொங்கை
விழாக்குடத்தில் நண்பு மிகீரோ - எழாத்துள்ளு 383

....
மம்மா னிடஞ்சேரி லீனமோ - செம்மாலை 384

தந்தணையா தேகத் தகாதென்று பின்சென்று
கொந்தணியும் வேணியரைக் கும்பிடலும்-எந்தைபிரான் 385

நில்லாது செல்ல நிகழ்த்தியது பாங்கிதனக்
கொல்லா தெனமானித் தோயுங்கால் - வில்லாற் 386

செருவிளைத்து மாரன் திருக்கொம்புக் கம்போல்
உருவிளைப்ப மற்றாங் கொருத்தி - அரிவை 387

அரிவை

காலப் புயலும் கனிவாயின் மென்மொழியும
கோலத் தெழுமின் குழலானாள் - வாலித்துப் 388

பொன்னித் துறையில் பொருஞ்சேலு முத்துருளும்
கன்னித் திருங்கோளு கண்ணினாள் - மன்னிய 389

தந்தமும் மால்யானைத் தந்தமும் சாற்றுங்கால்
அந்தண் இடைமுலைக ளாயினாள் - நந்தா 390

---

382. ஆணிப்பசுங்கனகம்-மாற்று உயர்ந்தபொன், ''ஆணிக்கனக வரமி யத்து'' (குற். உலா:260)

383. விழாக்குடம்-குடமுழா.

385. கொந்தணியும்-பூங்கொத்தணியும்; வேணியர்-சடையன் ''பாணியி னும் வேணியினும் முன்னாளில் வைத்த முடியிரண்டும்'' (குற். உலா:269), ''வேணி மயிலோடி விரைந்தொளிப்ப.'' (குற். உலா:106).

386. ஒல்லாதென-முடியாதென்று; மானி-பெண்.

387. மாரன்-மன்மதன்; அரிவை:20 அகவை முதல் 35 அகவைகூறாய் உள்ள பருவம்; அஃது நுகர்ச்சி முதிர்ந்த பருவமாம்.

389. பொன்னித்துறை-காவிரித்துறை; குடகு மலையினின்று பொன்னை வாரி வரலாற் பெற்ற பெயராம்; ''வையாறு தன்னில் பொன்னி இடை விலங்க'' (தமிழ். விடு. 181.) மன்னிய-நிலைபெற்ற.

390. தந்தம் - யானைக் கொம்பு.

திலங்குகரங் காலு மிருவெள்ளைத் தண்டும்
அலங்கு பொலங்குழைய லானாள் - நலங்கெழுதன் 391

வற்றாக் கமல மலருந் திருக்கழுத்தும்
முற்றாக் கனக முகமானாள் - கொற்றவரை 392

பாவைக் கொழுநர் பரித்த திருப்பிறையும்
கோவை யிதழும் குளமானாள் - ஓவிய 393

மண்டபமு மூத்தும் மணிவே திகைமீது
கண்டமுதச் சொல்லார் கணம்வணங்க - ஒண்டொடியும் 394

எய்தி யிருந்தொருதன் யாழ்மா டகமுறுக்கிச்
செய்து நரம்புத் திறமேற்றித் - தைவந்து 395

தசாங்கம்

பூத்திரண்டு தேவர் பொழியத் தமிழ்முனிக்குக்
கூத்திரண்டு நல்கும் குலக்குன்றும் - தீர்த்தமெல்லாம் 396

கண்டு பரவக் கம்பன் றிருமாலாய்ப்
பண்டு விளைந்த பழநதியும் - வெண்டிங்கள் 397

பாரச் சடையவர்முன் பன்னீராட் டைக்கொருநாள்
நாரப் பகீரதியாம் நன்னாடும் - நீரக் 398

கடையார் தரளக் கடல்நா கையினு
முடையார் தரித்திருந்த வூரும் - படையால் 399

---

391. இலங்கு - ஒளி செய்கின்ற. அலங்கு - ஒளிவிடுகின்ற. பொலம்- பொன்.

393. பரித்த - காத்த. திருப்பிறை - நெற்றி. கோவையிதழ் - கோவைப் பழம் போன்ற சிவந்த இதழ். குளமானாள் - இனிமையானாள்.

394. மணிவேதிகை - மணிகள் பதித்த மேடை.

395. மாடகம் - முற்றுக்காணி,

396. குலக்குன்று-சித்திரக்கூட மலை. தமிழ்முனி-அகத்தியன். கூத்திரண்டு- அகத்தியரின் வேண்டுகோளுக்கிணங்க. திருமண கோலத்தில் வலது பாத தரிச னத்தைக் காட்டினார். அப்போது ஆடிய இருவகைக் கூத்து.

397. பழநதி - கம்பா நதி, வெண்டிங்கள்-வெண்பிறை.

398. நன்னாடு-சோழநாடு; பாரச்சடை-சடாபாரம்; பன்னீராட்டை- பன்னீராண்டுகட்கொரு முறை வரும் மகாமகம்.

399. கடல் நாகை-கடற்கரைப் பட்டினமாம் நாகப்பட்டினம்,

எனைபிதா வென்னா தெறிந்துபூ சித்த
தனையன் முடிக்கமருந் தாரும் - வினையைத் 400

துடைத்தோ னுருளைச் சுடருருளைத் தேரில்
படைத்தோன் நடத்தும் பரியும் - அடுத்த 401

விரும்புச் சிலம்ப ரிரண்டா யிரம்வெண்
மருப்புச் சுவேதமத மாவும் - விரும்பில் 402

படியை யுழுது பறித்துண் டுவரைக்
கொடியை யுயர்த்த கொடியும் - நெடுவேய் 403

அகடு பெறுசிறுவ ராடுமிடந் தாண்ட
முகடு மதிரும் முரசும் - துகடீர் 404

நீளும் பதுமன் நிருமித்த வையமுழு
தாளும் பெரியதிரு வாணையும் - வாள்விழியும் 405

பாடலு மாதர் பணிந்துருகிச் செந்திருவே
வாட லணங்கர்க் கமுதே - பாடுமது 406

தீயோ டெதிருந் திருமேனி யானிருப்பை
மாயோ னிருப்பார்க்கும் மார்க்கமோ - தூயிசையால் 407

கும்பன் மலையம் குழைத்தநா ணியிருந்தால்
அம்பொன் னசலமெல்லா மல்லவோ - நம்பொரு 408

—அச்சய லிங்கம் துணை—

---

400. தனையன்-சண்டிகேஸ்வரர்; முடிக்கமருந்தார்-முடியில் அமரும் கொன்றை மாலை.

402. இரண்டாயிரம் வெண் மருப்புச்சுவேதமதமா-இரண்டாயிரம் கோடுகளை உடைய ஐராவதம் என்னும் வெள்ளை யானை.

403. படி-பூமி; பறித்துண்டு வரைக் கொடியை யுயர்த்த கொடி-திருமாலை வாகனமாக உடைய இடபக் கொடி; நெடுவேய்-நீண்ட மூங்கில்.

404. முரசு - பேரிகை. அகடு பெறு - பெரு வயிறுடைய.

405. பதுமன் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். திருவாணை - இறைவன் ஆணை.

396 - 405. கண்ணிகளில் இறைவனின் மலை, நாடு, நகர், ஆறு, யானை, படை, கொடி, முரசு, மாலை, ஆணை என்பன சுட்டப்பட்டன.

406. ஆடலணங்கர் - ஆடல்வல்ல காமன்.

408. கும்பன் - அகத்தியன். மலை - விந்தியமலை. விந்தியமலை செருக்கடக்கிய வரலாறு சுட்டப்படுகிறது, ''விந்தம் மதம் அடக்கி'', (குற். உலா: 31).

குறிப்பு:- தெரிவை பேரிளம் பெண் பகுதிகளுக்குரிய கண்ணிகள் கிடைத்தில.

இந்நூலின் குறிப்புரையில் எடுத்தாண்டுள்ள நூல்கள்

அகநானூறு
இராஜராஜசோழன் உலா
இலக்கணக் கொத்து
இலஞ்சி முருகன் உலா
கந்தபுராணம்
கம்பராமாயணம்
கலிங்கத்துப்பரணி
கலித்தொகை
குறுந்தொகை
குலசை உலா
குலோத்துங்க சோழன் உலா
குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
சிலப்பதிகாரம்
சிறுபாணாற்றுப் படை
சிவந்தெழுந்த பல்லவராயன் உலா
சேத்திரக் கோவை
தமிழ் விடு தூது
திருக்காளத்திநாதர் உலா
திருக்குற்றாலத் தலபுராணம்
திருக்குற்றாலநாதர் உலா
திருப்பூவணநாதர் உலா
திருவாசகம்
திருவாரூர்ப் புராணம்
திருவிளையாடற்புராணம்
திருவிடை மருதூர் மும்மணிக் கோவை
திருநாவுக்கரசர் தேவாரம்
தொல்காப்பியம்

நளவெண்பா
நன்னூல்
பரிபாடல்
பிங்கலநிகண்டு
பெரியபுராணம்
பெருந்தொகை
பெரும்பாணாற்றுப்படை
புறநானூறு
புறப்பொருள் வெண்பாமாலை
வடகரை விறலிவிடு தூது
விக்கிரமசோழனுலா

அரும்பத முதலியவற்றின் அகராதி

[எண்-கண்ணி எண்]

அ

அகத்தியன் :

கடல் நீரை உண்டது 11
கும்பத்தில் தோன்றியது 208, 352
தமிழ் விரகன் 261
தமிழ் முனி 396
தென்னகம் போந்தது 3
விந்திய மலையை அடக்கியது 408
அகரம்-அந்தணர் குடியிருப்பு 15, 264

அக்கினிதேவன் :

எழுநா 33
கனலி 30
வன்னி 262
அஞ்சு வட்டத்தம்மை-காளி 16
அடிமடக்குச் சொல்லணி 54-61
அண்ட கடாகம்-அண்டகோளம் 326

அரிவை : ஒண் தொடி 394

கயற்கண் 389
கனகமுகம் 392
கோவை இதழ் 393
பிறைநெற்றி 393
மின்குழல் 388
யானைக் கொம்பு போன்ற முலை 390

அலரி-சூரியன் 77
அளகேசன்-குபேரன் 39
அறச்சாலைத்தாய் - காஞ்சி அம்மன் 269

ஆ

ஆதிசேடன் 131
அதிசேட தீர்த்தம் 263
ஆரப்பிணை - முத்துமாலை 94
ஆழிக்கன்று - விநாயகர் காப்
ஆறுமுகம் - முருகன் 265

இ

இசைக் கருவிகள் முழங்குதல் 144, 145

இந்திரன் :

ஆயிரம் கண்ணுடையவன் 203
வாசனார் 209, 308
யாகக்குயில் 309
தீர்த்தம் 263

இந்திராணி 141
இந்திர நீலப்படிவம் - நீலக்கல் லிங்கம் 99
இமய வல்லி - உமை 364
இமய மகள் - உமை 380
இரதி தேவி - காமன் மனைவி 286
இரு மருத்துவர் 136
இளங்கோ - இளம்பசு 301
இலந்தை மூர்த்தமானது 7
இலந்தை வனம் 15, 189, 260
இலந்தை வனநாதர் காப் 13, 72, 332

உ

உதர பந்தம் - இடைக் கசசு 95
உரகன் - ஆதிசேடன் 23
உமையாள் - பார்வதி 2

எ

எட்டு வசுக்கள் 136
எண் அணி 260 - 266

ஏ

ஏழு கடல் 21, 266
ஏழு தெய்வ மகளிர் 141
ஏழு நதி மாதர் 142
ஏழு முனிவர்கள் 136

ஐ

ஐவகைத் தாயர் 223, 230

க

கஞ்ச மலர் - தாமரை 222
கடல் வண்ணன் - கண்ணன் 239
கடுக்கை - கொன்றை 97, 320
கண்ணன் சத்யபாமாவுக்கு பாரிசாதம் கொணர்ந்தது 239
கலைமகள்-சரஸ்வதி 130
கவுரி-பார்வதி 82
கழுக் குன்றம்- திருக்கழுக்குன்றம் 313
காகளம்-எக்காளம் 371
காப்புநாண்-காப்புக் கயிறு 88
காளத்திஞானப் பூங்கோதை 268
காலத்தரி-எமன் 85
கீழ்வேளூர் அவை, 360
குபேரன் புட்பக விமானம் 138
குலமவுலி-உயர்ஜாதி கிரீடம் 90
குற்றாலம்-திருக்குற்றாலம் 185
கேடிலியப்பர் :
அவை, 149,201,377
கேடில்லாதவன் 23
மழுவெறிந்தது 45-49,199
கேடிலியப்பரை: அக்னி வழிபட்டது 31
ஆதிசேடன் வழிபட்டது 23-27,198
இந்திரன் வழிபட்டது 28-33,347

சந்திரகுப்தன் வழிபட்டது 31-40
சிங்கத்துவசன் காட்டரசன் வழிபட்டது 189
திருமால் வழிபட்டது 28, 196, 354
முருகன் வழிபட்டது 14-23
விதுர்மன் வழிபட்டது 40-46

கேழல்-பன்றி 171

ச

சடேசுரன் - சிவன் 70
சப்தகன்னியர் 142
சம்பந்தர் ஆயிரம்-சமணை இட்டது 112
சம்பந்தர் பூம்பாவையை எழுப்பியது 69
சம்பந்தர் ஆண் பனையைப் பெண்பனையாக்கியது 108
சண்டிகேஸ்வரர் 111, 400
சரவணப்பொய்கை 20
சரவணத்தீர்த்தம் 263
சாத்தன் யானைவாகனம் 137
சித்திரகூடமலை - குற்றாலம் 6, 333
சிவசைலம் 63
சிவலோகத்து மாதர் 154

சிவபிரான் :

அசலன் 64
அமலன் 64
அழற்கண் 280
அனபாயன் 78
ஆகமசாகரன் 71
கறுத்தமிடறு 100, 163
சங்கரன் 282
தழற்கண் 295
நெற்றிக்கண் 279
நாகாபரணன் 73
நான்முக நாயகன் 71
பாம்புகச்சு 165
புலியூரான் 56

பொற்காது 161
மாதொருபாகன் 20, 58, 148, 154
முக்கண்ணன் காப்பு
சித்திரகூடேசன் 12
செய்யான் 245
விசாலன் 70
வில்லி 364

சிவபிரான் :

ஆகாயத்தை ஆடையாகக் கொண்டது 51
ஆலநீழியில் அறம் சொன்னது 151, 182
ஆனைக்காவில் வவ்வாரம் பூண்டது 335
இந்திரனை அழித்தது 309
இராவணன் செருக்கை அடக்கியது 66
கங்காளத் திருமேனி எடுத்தது 243, 324
கங்கையை அணிந்தது 149, 160, 278, 363, 378
கபால ஓட்டை ஏந்தியது 67
கரிக்குருவிக்கும் நாரைக்கும் முக்தி அளித்தது 314
கணிச்சிப் படைகொண்டது 68
கண்டத்தில் விடம் 51
காரைக்கால்அம்மையாரின் பாட்டைவிரும்பியது 380
கூடலில் பழிக்கஞ்சியது 379
கூற்றுதைத்தது 113, 148, 342
சம்பந்தரின் தந்தைக்குப் பொற்கிழி அளித்தது 226
சண்டேசுரருக்கு அனுக்கிரகம் அளித்தது 244
தடாதகையுடன் கன்னிப்போர் செய்தது 300
திரிபுரம் எரித்தது 322
திருப்பனந்தாளில் உடை காத்தது 176
நாக அரசர்கள் காதில்
குண்டலங்களாக விளங்குவது 143, 321, 362
நெல்லையில் மூங்கிலில் லிங்கமாக தோன்றியது 187
பகிரதற்காகக் கங்கையைச் சூடியது 253
பரவைபால் தூது சென்றது 108, 370
பரதராச மகளை விரும்பியது 381
பாம்பை சூடியது 56
பாலப்படை கொண்டது 53

பிரமனின் குருதியைப் பிச்சை கொண்டது	68
பிரமனின் தலையைக் கொய்தது	310
பிறை சூடியது	59
பூமியைத் தேராகக் கொண்டது	53
மன்மதனை எறித்தது	147, 179, 206
மேருவை வில்லாக வளைத்தது	81
யாகம் நடத்தியது	54
வளையல் விற்றது	175
விடத்தை உண்டது	148
வேழம் உரித்தது	377
சீர்காழி	63
சுதன் - முருகன்	246
சுந்தரர் பொன்னைக் குளத்தில் எடுத்தது	114
சுரகுரு - தேவகுரு	29
சுருக்கு - கண்ணி	97
செங்கண்வளவன் - கோச்செங்கட்சோழன்	35
சென்னித் திருநாடு - பாண்டிநாடு	4
சேரமான் பெருமாள் பத்திரனுக்கு திரவியம் அளித்தது	116
சோணாடு - சோழநாடு	107

ஞ

ஞெகிழித் திசை - வடமேற்குத் திசை	5

த

தசாங்கம்	396 - 405
தடங்கண்	286
தரளவடம் - முத்துவடம்	171
தருமபுரம்	63
தாருகவனத் தோகையர் - தாருகா வனத்து ரிசிபத்தினியர்	177
தாழ்வடம் - தொங்குவடம்	164
திங்கட்பதிமகள் - இருபத்தேழு நட்சத்திரமாதர்	141
திருக்கழுக்குன்றம்	185

திருப்பழனம் 55
திருப்பறியல்வீரட்டம் 62
திருமருகல் 157
திருமழப்பாடி 62
திருமறைக்காடு 62
திருமால்:
சிவனுக்கு இடமாக இருப்பது 157, 362
கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்தது 327
கருடவாகனம் 134
சங்கேந்தியது 55
நிலமளந்தது 128
பாம்புபாயல் 326, 354
சிவபெருமானின் அடியைத் தேடியது 326
திலதைபதி 62
திருவருணை 62
திருவாரூர் 63
திருவானைக்கா 184
திருவீழிமிழலை 62
தோள்வளை 93

ந

நந்திதேவர் 110
நரன் - யச்சன் 138
நறையோதி - நறுங்கூந்தல் 361
நாகை - நாகப்பட்டினம் 399
நாவுக்கரசர் கல்லை மிதக்கச் செய்தது 108
நாவுக்கரசர் நீற்றறையில் மெய் குளிர்ந்து நின்றது 113

ப

பதாகைத் திருநாள் 34
பதினாலு யுகம் 323
பதினொரு உருத்திரர் 135
பதுமம் - குளம் 290
பரிதிநியமம் 62

பரிசனம் - ஏவலர்	121
பணி - பாம்பு	260
பணிலம் - சங்கு	61
பன்னிரு சூரியர்	135
பாதச் சிலம்பு	96
பார்வதி - உமை	140
பார்த்தன் - அர்ச்சுனன்	132
பாலாழி - திருப்பாற்கடல்	169
பாணி - கை	1, 55, 343, 382
பிரம்மன்:	
கமலத்தோன்	1
கஞ்சம்	241
நாண்முகன்	283
அன்னவாகனம்	134
பிரம்மலோகத்து மாதர்	156
புதன் குலம் - தேவர் குலம்	146
பூதக் கடல்	124
பெதும்பை:	
அர்ச்சுனன் அம்பைப்போன்ற விழி	254
தருண அரும்பு	248
தூளி விளையாட்டு	252
பருவ வல்லி	250
புள் எட்டிப்பார்த்தன்ன முலை	255
புணர்ச்சி நிலை கூறல்	257
புனல் விளையாட்டு	252
மயக்கும் தேறல்	247
மாரன் கைக்கரும்பு	248
விழிக்குறிப்பை அறிபவள்	256
வீடென்ன நெஞ்சாள்	251
பெருந்திருக்கோயில் - மாடக்கோயில்	35
பேதை:	
அமுதில் முளைத்த முளை	207
ஆம்பலின் அல்லியிதழ்போன்ற பல்	216
இளந்தென்றல்	206

உந்தித் தாமரை 212
கண்ணாடி பார்த்தல் 222
காமன் போர்செய்யா இளந்தோகை 210
கும்பத்தில் உள்ள சந்தனப் பூங்கன்று 208
பொருள் மயக்கும் சொற்கள் 215
மழலைச்சொல் 233
மருக்கொழுந்து 209

பேதையின் முலைக்கு உவமை:

கோங்கின் மொட்டு 217
குறும்பை 218
தாமரை மொட்டு 218
நீர்க்குமிழி 217
யானைக் கொம்பு 219
பேதையின் நுதலுக்கு பிறை 211
பேதையின் கூந்தலுக்கு மேகம் 213

பேதையின் விளையாட்டு:

மண் சூடு விளையாட்டு 220
பாவை அயர்தல் 220
வண்டல் அயர்தல் 224
பௌவம் - கடல் 150

ம

மங்கை:

கரிநிகர் முலை 302
கணைக் கண்கள் 300
கூவப் பயின்ற குயில் 298
புணர்வகை அறிந்தவள் 303
பூந்தவளம் 291
மதுரித்த சொல்லாள் 301
முத்து நகை 299
முருகிய வெல்லப் பாகு 297
வண்டு மொய்க்கும் கூந்தல் 299

8350

மடந்தை:
கும்பமுலை 352
குதலை சொற்கள் 350
கோமளப் பூ 346
தாமரைக் கண்கள் 349
நிதி முகம் 351
நூலிடை 353
பாம்பு வயிறு 354
பாம்பு அல்குல் 354
பொற் கழுத்து 351
மணிவிளக்கு 347
மேகக் கூந்தல் 348
மதுரை 63
மருது - திருவிடைமருதூர் 62
மலையாள் - உமை 329
மயிலை - மைலாப்பூர் 60
மவுலி - கிரீடம் 260
மனுநீதிசோழன் 117
மாணிக்கவாசகர் ஊமையை பேசவைத்தது 109
மாரன்:
மன்மதன் 296, 311, 344
தென்றல் வாகனம் 137, 378
நாரிச் சுரும்பு 307
வில் 205
வேள் 285
முடிகம் - பெருச்சாளி 134
முதலீற்றுத் தீம்பால் 301
முரகரி - திருமால் 28
முருகன்: அசுரனைக் கொன்றது 14, 52
மயில்வாகனம் 134
முருகன் 227
மூர்த்தி நாயனார் கையை உரைத்து
இறைவனுக்குச் சந்தனம் அளித்தது 341
மூவர் பாடல்பெற்ற தலம் - கீழ்வேளூர் 50
மூன்றாம் பிறை 162

மேருமலை 63, 81, 254

ய

யாமளை - காளி 141

வ

வடவாக்கினி - ஊழித்தீ அவை
வதுவை - திருமணம் 10
வரகுணன் தன் மனைவியை சிவனுக்குஅளித்தது 118
வனமுலை நாயகி 190
வாதவூரார் 186
விடைக்கொடி 74, 120, 126
விநாயகன் 227
விருஷப தேவர் 133
விளநதர் 63
வேணி - சடை 55, 330, 385
வைகுண்டலோகத்து மகளிர் 157